திராவிடநாடு

5—5—57 | வார வெளியீடு | விலை 0—2—6

புதுப்பாதை காண்போம்!

[என். பி. நடராசன், வெள்ளளூர்]

—(::)—

ஆண்டுக்கோர் முறைகூடி 'அவரிவரை'க் கூட்டி
அழகுச்சொற் பெருக்காற்றச் சொல்லிவிட்டால், நம்மை
தீண்டவரும் 'விசைப்' பாம்பு செத்திடுமோ? வாழ்வை
தின்னவரும் 'பசி'ப் புலியும் தீய்ந்திடுமோ? நாட்டை
ஆண்டவரும் ஆள்பவரும் ஒருங்காகித் தீட்டும்
அறிவொவ்வாத் திட்டத்தை, என் தம்பி! இன்று
மூண்டு வரும் 'உரிமை'யெனும் வெந்தீயில் இட்டு
முறியடித்து, நாம் வாழப் புதுப்பாதை காண்போம்!

பாலாடை பனிபோலும் பல்லாடை நெய்து
படிவாழும் மனிதகுல மானத்தைக் காத்தோய்!
மேலாடை இல்லாத தாய், தங்கை வாழ்வை
மணல்மேடாய் ஆக்குமடா மானமிலார் செய்கை!
காலாடக் கருத்தாடக் கண்ணொளியும் ஓட
கரையோடு நீ நெய்யும் சேலையொடு வேட்டி
நூலாடும் கைத்தறிக்கே சொந்தமென ஆக்கி
நல்வாழ்வு வாழ்ந்திடவே புதுப்பாதை காண்போம்!

பதவிக்கும் பகட்டுக்கும் பணம்கொட்டி தம்பி!
பக்கபலப் படைதேடி வாழ்கின்ற எத்தர்
சதமென்று எண்ணிவரும் சீரொழுகும் வாழ்வை
சரித்திரங்கள் கற்றவனே! தன்னுரிமை வேட்கை
பதம்பார்த்த சேதியினை நீயறிவாய்! இஃது
பகுத்தறிவுக் காலமடா! நாடாமேல் ஆணை!
உதவாத திட்டத்தை உருவின்றி மாய்த்து
உயிர்வாழ்வு வாழ்ந்திடவே புதுப்பாதை காண்போம்!

காஞ்சீபுரம்

5—5—57

தம்பி!

"இன்று சரியாகப் பதினொரு மணிக்கு, கழகத்தவர் பதினான்கு பேர்களுடன், என் அண்ணன், சென்னை சட்டசபை சென்று அமரப்போகிறார்." என்று, அகமும் முகமும் மலர்ந்த நிலையில், பெரியதோர் வெற்றி, புதியதோர் வெற்றி பெற்றோம் என்ற களிப்புடன், உன்போன்ற உள்ளம் கொண்ட எண்ணற்றவர்கள், பேசிக்கொண்டிருக்க,

"இந்தச் சனியன்கள் இன்று சட்டசபை நுழைகின்றனவாம். பதினொரு மணிக்காம்! காலம் இப்படியுமா கெட்டுவிடவேண்டும்? கமலம் பூத்துக் குலுங்கும் தடாகத்தில், கசுமலம் சேருகிறது! கண்ணுக்குக் கண்ணை, காமராஜர் கொலுவீற்றிருக்கும், மன்றத்திலே இந்த 'கண்ணீர்த் துளிகள்' செல்லுகின்றனவே!" என்று, தாமாக, வீணாக, வேதனையை வருவித்துக்கொண்டு, அவதிப்படுவோர் அங்கலாய்த்துக் கொண்டிருக்க,

"அடுக்குமொழி பேசி ஆளை மயக்கி, ஆகாத திட்டமெலாம் பேசி ஊரைக்கலக்கி, உதவாக்கரைக் கொள்கை கூறி உண்மைப் பண்புக்கு ஊறு தேடிடும், மாபாவிகள், வகுப்புவாதிகள், பிளவு உண்டாக்கும் பேதைகள், நாம் நானிலம் கண்டு புகழத்தக்க விதமாக, நமது நாட்டினை நடத்திச் செல்வதற்கான அரும்பணியாற்றக் கூடிடும் மணிமாடத்தில், கதிர் குலுங்கும் பயிரருகே மறைந்து கிடக்கும் களைபோல, முத்து தூங்கும் கடலிலே ஊர்ந்திடும் நத்தைபோல, முல்லை பூத்திடும் கொல்லையின் ஒருபுறம் கள்ளி இருத்தல் போல, பாதகப் போக்கினர் பதினைந்து பேர் வந்து அமரப்போகின்றனரே! அடாது இச்செயல் என்பதனை அறிவிக்க, விண்மீன்கள் உதிர்ந்திடுமோ—ஆழ் கடல் வறண்டிடுமோ—வானம் இருண்டு, பேய்க்காற்று வீசி, இடி முழக்கி, மழை பெய்து வெள்ளக்காடாகிடுமோ!—என்றெல்லாம் எண்ணுவதற்கு, இது அக்காலம் அல்லவே! தக்கோர்க்கு இடமளிக்குமாம், இடமளிக்க, தானே வளருமாம், மற்றையோர் அமர்ந்திட இடம் இராதாம், அன்றோர் நாள் இருந்த சங்கப்பலகை ஒன்று! இற்றை நாளில், கற்றைச் சடைமுடியான், கண்ணுதலான் வீற்றிருந்து நடாத்தும் கழகம் ஏது? எனவே, தான், ஏதேதோ நுழைகின்றன! என்செய்வது? நாமும், அங்கு அமர்ந்திடவேண்டி இருக்கிறது!" என்று சட்டமன்றத்தவர்களாகிவிட்ட காங்கிரஸ்காரர்களில் பலர், கவலை கொப்பளிக்கும் நிலையினராகி இருந்திட,

"அரும்பாடுபட்டோம், தூயதோர் திட்டத்தை உளமாரக்கொண்டு பணியாற்றினோம், எனினும் 'பணம் பாதாளம்வரை பாயும்' என்ற பழமொழியின் வலிவு, நம்மைத் தாக்கியதால், தோல்வி பல இடங்களில் கண்டோம், துயரத்தைத்

★ ஆலிங்கனமும்—அழிவும்!

தாங்கிக்கொண்டோம், ஆளுங் கட்சியினர் 150-பேர் உளர்! நாம் இதில் பத்தில் ஓர் பகுதியே! இந்நிலையில் உள்ளே செல்கிறோம். நமது உள்ளத்தில் உறைந்திடும் உத்தமக்கருத்தினை, எண்ணிக்கை அதிகமுள்ள காரணத்தால், அவர்கள், எள்ளி நகையாடக்கூடும், துரைத்தனம் தமது என்பதால், துடுக்குத்தனம் ஆகாது என்ற பண்பினையும் மறந்து, நம்மைத் துச்சமென்று எண்ணிடக் கூடும், இச்சிறு கூட்டம், எப்படியோ இங்கு வந்து இடம் பிடித்துக் கொள்கிறது! உண்டு மிஞ்சியதைக் காக்கையும் பெறுமல்லவா! இதுகளுக்கு ஒரு பதினைந்து கிடைத்தது, அது போன்றதே! இந்தச் சிறுகுழு, அடக்க ஒடுக்கமாக, ஆட்சிப் பொறுப்பும், அது அளிக்கும் கருவிகளும் கருவூலங்களும் மிகுதியாக எம்மிடம் உளது என்பதை அறிந்து எமது ஏவலர் போன்றிருத்தல் வேண்டும்! ஏன்? எப்படி? எது? என்று பேசிடத் துணிவரேல், எமது கோபப் பார்வையாலேயே சுட்டுச் சாம்பலாக்கிடுவோம்—என்றெல்லாம், காங்கிரசார், மிரட்டு மொழி பேசி, உருட்டு விழி காட்டுவரோ, என்ற ஐயப்பாடு தொடர்ந்திட,

நாங்கள் பதினைந்து பேரும், சென்னைக் கோட்டையில் நுழைந்தோம்!!

கோட்டை! அகழ் — அரண் கொண்டதாக ஆங்கிலேயன் அமைத்த கோட்டை! அலைகடல் எதிரே! உள்ளே, அரசோச்ச, மக்களிடம் அனுமதி பெற்றோர் அமர்ந்திடும் இடம்.

இந்தக் 'கோட்டை'யை, பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு பார்த்து, பயம் வெளியே தெரிய ஒட்டாதபடி மிகச்சிரமப்பட்டு, மறைத்துக்கொண்டு,

பாருக்குள்ளே நல்ல நாடு
எமது பாரதத் திருநாடு

என்ற பண்ணினை, வெண்மணற் பரப்பினையே மன்றமாகக்கொண்டு இசைத்து, எழுச்சியும் இன்பமும் பெற்றவர்கள்—இன்று கோலோச்சும் நிலைபெற்று,

கோட்டையும்
கொத்தளமும்
கோலும் கொடிமரமும்

எம்முடையதாகிவிட்டது காணீர்! என்று பேசும் நிலையில் உள்ளனர்.

இவர்கள் ஒருநாள் இந்நிலை பெறுவர் என்பதனை இருபதாண்டுகட்கு முன்னம், யூகித்தறிந்திட முடியாதிருந்த ஆங்கிலேயன், கொக்கரித்தானல்லவா.

இத்தனைக்கும், பிறர் கண்டறிந்திடாத பல கருத்துகளை அறிவாற்றலால், கண்டறிந்தவன் கால்சட்டைக்காரன்!

இங்கு தங்கம் கிடைக்கும்—இரும்பு இங்கு இருக்கும் — காட்டாற்றினை இதுபோலக் கட்டுப்படுத்தலாம் — காற்றினை இது கொண்டு எதிர்த்து நீந்தலாம்—கடலுக்குள்ளேயே கலம் சென்றிட இயலும் — கல்லின் வயதையும் கணிக்கலாம்— என்ற இன்ன பிறவற்றிலெல்லாம், பெருமதி காட்டினவன்தான் வெள்ளையன் —எனினும், மறைந்துகிடந்த விஞ்ஞான உண்மைகள் பலவற்றினை, துருவித்துருவிக் கண்டறிய முடிந்ததே தவிர, அவனால் கொடி பிடித்துக்கொண்டு 'வந்தே மாதரம்' எனும் 'கோஷம்' கிளப்பிக் கொண்டு வருகிற ஒரு சிறு கூட்டம் அன்னிய ஆதிக்கத்தை அழித்தொழிக்க வேண்டும் என்ற எழுச்சியின், சிறு வடிவம் என்பதனை மட்டும், கண்டறிய முடியவில்லை!! ஆதிக்கம், அறிவினை அந்த முறையில் மழுங்கச் செய்து விடுகிறது!

அவன், கிரேக்க சாம்ராஜ்யம்' ரோமானிய சாம்ராஜ்யம், உதுமானிய சாம்ராஜ்யம், எனும் பலப்பல ஆதிக்கப் பேரரசுகள், வீழ்ச்சி அடைந்த வரலாறு நன்கு படித்திருந்தான் — எனினும், தன் ஆதிக்க அரசு குலைந்துபோகாதிருக்க, அந்த வரலாற்றிலேயே, பாடம் தேடினான்—ஏதோ கிடைத்தது — அது தன்னை என்றென்றும் காப்பாற்றும் என்று எண்ணினான் — உண்மை திடீரென்று பிறகோர்நாள் அவனைத் தாக்கித் துரத்திற்று! தன்பேதைமையைப் புன்னகையால் மறைத்துக் கொண்டு, ஒட்டம் பெருநடையாய், ஊர்போய்ச் சேர்ந்தான்!

தம்பி! நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நாட்களிலே, இந்தக் 'கோட்டை'யிலும் சூழவும் என்றென்றும் நம்மை யாரும் அசைக்க முடியாது என்ற எண்ணத்தை கக்கிக்கொண்டு கிடந்த வெள்ளையர்களைக் கண்டிருக்கிறேன். அவர்களின் நடமாட்டத்தைக்கண்டு நடுங்கி, நம்மவர்கள், அடங்கி ஒடுங்கிச் சென்றதையும் கண்டிருக்கிறேன்.

அவனே, 'எதிர்காலம்' இப்படி எல்லாம் வடிவெடுக்கக்கூடும் என்பதனை அறிந்து கொள்ளாதிருந்தான் என்றால், ஆளவந்தார்களாகிவிட்ட காங்கிரசார், எங்ஙனம், 'எதிர்காலம்' எப்படியெல்லாம் உருவாகிக்கொண்டு வருகிறது என்பதை அறிந்திட முடியும்.

குற்றம் அவர்கள் மீது அல்ல, தம்பி, கோலெடுப்போரில் பெரும்பாலோர், குறைமதியையே துணையாகக் கொண்டழிந்துபட்டனர்!

'கோட்டை'க்குள்ளே நுழைந்த போது, இதுபோலெல்லாம் எண்ணிக்கொண்டேன்!

பீரங்கிக்குப் பக்கத்தில் நாம் நிற்கிறோம்—ஒரு மூங்கிலாலான கொடிமரத்தின் கீழே நின்று கொண்டு, கொக்கரிக்கிறார்களே, சுயராஜ்யம் வேண்டும் என்று!! கோட்டை எம்மிடம் — வெட்ட வெளி நின்று வீரம் பேசுகிறார்களே! — என்று அன்று ஆங்கிலேயன் ஆணவத்தால் பேசினான். இன்று......!!—என்று எண்ணிக் கொண்டேதான் உள்ளே சென்றேன்.

வாழ்த்தொலி! ஆமாம்! கோட்டையானாலென்ன, கொத்தளமானாலென்ன — எப்படியோ பெருந்திரள் கூடிவிட்டது, வாழ்த்தொலி கூறிட!!

இந்தப் 'பதினைந்துக்கே' இவ்வளவு ஆர்ப்பாட்டமா....... என்ற அலட்சியத்தைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, காங்கிரஸ் அன்பர்கள் உள்ளே நுழைந்தனர்.

கொட்டும் மழையில், குடையுமின்றி, எட்டாண்டுகளுக்கு முன்பு இராயபுரத்தில் ஓர் வெட்ட வெளியில், நின்று பேசினோம் — நினைவிலே இருக்குமே, தம்பி!! பெரியாரின் போக்கால் நாம் அதுவரை உகுத்த கண்ணீரின் அளவினைக் காட்டுவதற்கு இயற்கை எடுத்துக் கொண்ட முயற்சி போன்றிருந்ததல்லவா, அன்று பெய்த மழை; அன்று துவக்கப்பட்ட, **திராவிட முன்னேற்றக் கழகம்**, சதிகளைச் சகித்துக் கொண்டு, சூழ்ச்சிகளுக்கு

இரையாகாமல், எதிர்ப்புகளால் முறிந்து போகாமல், பழிச்சொல்லால் பாழ்படாமல், நம்மை அழித்தொழிக்க எண்ணுவோர் எத்துணை தரக்குறைவாக நடப்பினும் நாம் நமது முறையையும் நெறியையும் தரம் கெடாமல் பார்த்துக்கொண்டு, நாட்டு மக்களின் நம்பிக்கையை மெள்ளமெள்ளப் பெற்று, அரசியல் கழைக்கூத்தாட்டம் நடத்தாமலும், மயிர்க் கூச்செறிய வைக்கும் செயல்களைச் செய்து காட்டாமலும், அந்த நம்பிக்கையை, நமது பண்பு நிறைந்த பணியின் மூலமே பெற்று, ஒரு பொதுத் தேர்தலில் ஈடுபட்டு, அந்தப் பாரத்தைத் தாங்கிக்கொண்டு, ஒரு பதினைந்து பேர், கோட்டைக்குள்ளே நுழைந்திடத்தக்க நிலையையும் பெற்றிருக்கிறோம்.

மணி பதினொன்று — நல்ல வெயில் — எனினும், என் மனக்கண்முன் அப்போது, துவக்க நாளன்று பெய்த மழைதான் தெரிந்தது.

அடாது மழை பெய்தாலும் விடாது கூட்டம் நடந்தே தீரும் — என்று குடந்தை **நீலமேகம்** பேசின காட்சி தெரிந்தது!! அந்தத் திடல்—அதிலே, மழையால் ஏற்பட்ட சகதி—அதனைப் பொருட்படுத்தாமல் பெருந்திரள் கூடி நின்றிருந்தது — எல்லாம் மிகத் தெளிவாக எனக்குத் தெரிந்தன!

அந்த 'நாம்'—இன்று இங்கே!! —என்று எண்ணிக்கொண்ட போது--எனக்கு உள்ளபடி, தம்பி, 150—15—என்ற இந்தக் கணக்கு மறந்தே போய்விட்டது—திக்குத் தெரியாத காட்டிலே, தத்தி நடந்த சிறகொடிந்த பறவைபோன்றிருந்தோம் அன்று—இன்று நொண்டி நடந்துகொண்டேனும், இந்த 'ஆட்சிமன்றம்' நுழைந்திருக்கிறோம்—இந்தக் கட்டம் வரையில், வளர முடிந்ததே, வளர, நாடு ஊட்டம் அளித்ததே, நல்லோர் துணைபுரிந்தனரே, என்று எண்ணினேன்—நன்றி கூறியபடி, உள்ளே நுழைந்தேன்.

இதற்கு ஏன் இவர்கள் இத்துணை களிப்படைகிறார்கள் என்று எண்ணிக்கை பெருத்தோர் கேட்கின்றனர் — அவர்களுக்குப் புரியாது; இந்தக் 'கட்டம்' வந்தடைவதற்கு முன்பு, நாம் நடந்து சென்ற பாதையிலே என்னென்ன படுகுழிகள் — சரிவுகள்— சதுப்புகள்—இருந்தன என்பது அவர்கட்கு எப்படித் தெரியும். அவர்கள் ஒரு 'மகாத்மாவின்' 'மந்திரக் குளிகை' அணிந்துகொண்டு இந்த மன்றம் வந்திருக்கின்றனர்! ஆகாய விமானமூலம் ஆறாயிரம் மைல் பயணம் செய்தவன் அலுப்பாக இருக்கிறது என்று ஆறு கல் நடந்துவந்தவனிடம் கூறும்போது, கேலிப் புன்னகை செய்வதுபோல, அவர்கள் நிலை இருக்கிறது. அவர்களில், எத்தனை பேர், நாம் கண்ட எதிர்ப்புகளின் வகையை, அளவைத் தாங்கிக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க முடியும், என்ற ஒரே எண்ணத்துடன் நான் அங்கு அமர்ந்திருந்த காங்கிரஸ் அன்பர்களைக் கவனித்துப் பார்த்தேன்—அவர்கள் நான் கூறுவது கேட்டு வருத்தப்பட்டுக்கொள்ளக்கூடாது—அவர்களில் மிகச்சிலரே — விரல்விட்டு எண்ணக் கூடிய மிகச் சிலரே, அத்தகைய உள்ள உரம் படைத்தவர்கள்!! நிச்சயமாக!!

கொட்டும் வறுமையைத் தாங்கிக்கொண்டு, உனக்கேனடா இந்த ஊரைத் திருத்தும் வேலை— என்று கோபத்துடன் அல்ல— வேதனையுடன் கேட்டிடும் பெற்றோரின் பெருமூச்சைக் கேட்டுக் கலங்கிச் செயலற்றுப்போகாமல், ஊரிலுள்ள உலுத்தனெல்லாம், ஓம் நமச்சிவாயா! என்று கூறிவிட்டு ஊர்க் குடி கெடுத்துக்கொண்டே, 'உலகமல்லவா அழிந்துபடும் இந்த உதவாக்கரைகளை வளரவிட்டால், இதுகள் சாமியே கிடையாது என்றல்லவா பேசுகிறதுகளாம்' என்று கொதித்துப் பேசுவதைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டு, பத்திரிகைகள் இருட்டடிப்பாலும், இட்டுக்கட்டுவதாலும் தாக்க, அதனால் தகர்ந்து போகாமல், அடித்தால் சிரித்து, ஆத்திரமூட்டப் பேசினால் அன்பு காட்டி, நாம், நமது பணியினைத் தொடர்ந்து நடத்திவந்ததுபோல, இதோ இந்த 150-பேர்களில் எத்தனைபேர்களால் முடிந்திருக்கும்— என்று, நான் மிகக் கூர்மையாகவே கவனித்துப் பார்த்தேன் —மிகச் சிலரால்தான் முடிந்திருக்கும். நிச்சயமாக!!

அதோ இராமநாதபுரம் ராஜாவும், செட்டிநாட்டு ராஜாவும் அமர்ந்திருக்கின்றனர்.

அவர்களுக்கு அவர்களுடைய 'முன்னோர்' வைத்துவிட்டுப் போனது, செல்வம் செல்வாக்கு— மாட மாளிகை கூடகோபுரம்— வியாபாரம்—முதலியன!!

அவர்கள் ராஜ குடும்பத்தில் பிறந்தார்கள் — 'ராஜோபசாரம்' பெற்று வளர்ந்தார்கள்!!

அவர்கள் கூட, தாமும் சில பல, பாடுபட்டுத் தேடிப்பெற்று அனுபவித்தால்தான் 'சுவை' மிகுதியாக இருக்கும் என்பதறிந்திருக்கிறார்கள்.

இதோ காங்கிரஸ் அன்பர்கள் இருக்கிறார்களே, இவர்கள் ஒவ்வொருவரும், 'மகாத்மா' அரும்பாடுபட்டு, சபர்மதியில் தவமிருந்து, எரவாடாவில் சிறையிருந்து, தண்டியில் யாத்திரை செய்து, உண்ணாவிரதமிருந்து, உலகையே ஒரு கலக்கு கலக்கி, பெற்று வைத்துவிட்டுப் போயிருக்கும், பெருஞ் செல்வத்தை ரசித்து ருசி பார்த்துக் கொண்டிருப்பவர்கள்— இவர்களுடைய 'சாதனைகள்' என்ன என்று கேட்டுவிடாதீர்கள்—சுவைக்கத் தெரிந்திருக்கிறதே! மோப்பம் பிடித்து இரை கிடைக்குமிடம் கண்டறிந்தது ஒரு சாதனை அல்லவா!!

நாம்—தம்பி! மகாத்மாக்களின் மாநிதிக்கு 'வாரிசு'களாக முடியவில்லை. நாமே—காடு திருத்தினோம், கழனியாக்கினோம்-வரகோ, சாமியோ, அது நமது உழைப்பின் பலன்—எனவேதான், பதினைந்து பேர் உள்ளே நுழைந்தபோது வாழ்க! என்றனர். பொருளற்று அல்ல! அதன் பொருளை, பிறருடைய சேமிப்பில் வாழ்வு நடாத்துவோர் உணர்ந்துகொள்ளத்தான் முடியாது?

இங்கே நான் பார்க்கிறேன் காங்கிரஸ் கட்சியால் நிறுத்தப்பட்டு வெற்றிபெற்று அமர்ந்திருக்கும் 150 பேர்களை!

அதென்ன அண்ணா! காங்கிரஸ் கட்சியால் நிறுத்தப்பட்டவர்கள் என்று சுற்றி வளைத்துப் பேசுகிறாய் — காங்கிரஸ்காரர் என்று சுருக்கமாகக் கூறக் கூடாதோ என்று கேட்காதே தம்பி, இவர்கள் அத்தனை பேர்களையும், காங்கிரஸ்காரர் என்று கூற, மனம் இடம்தரவில்லையே, என் செய்ய!

அவர்களுக்கு அங்கு இடம் கிடைத்திருக்கிறது—உன் மனம் இடம் தராது போவதென்ன என்றுகேட்டுஎன்னைத்தொல்லைப் படுத்தாதே, தம்பி, கரையான் புற்றெடுக்க பாம்பு குடிபுகுந்துவிடுகிறது.

(14-ம் பக்கம் பார்க்க)

மூளையின் வளர்ச்சி

மா. கி. தசரதன்

முதலில் தளதளவென்று இருக்கும் சின்னஞ்சிறு உடலைக் கண்டுதான் வியக்கின்றோம். பட்டுப்போன்ற அதன் உடலைத் தொட்டுப்பார்த்து மகிழ்கின்றோம். ஆனால் குழந்தை, நாம் தொட்டுப்பார்த்து மகிழுகின்ற நிலையிலேயே என்றும் இருப்பதில்லை. மெல்ல மெல்ல உடல் வளர்ச்சியடைவதைப்போன்றே உள்ளமும் வளருகின்றது. உள்ளம் வளருகின்றபோதே மூளையும் வளருகின்றது. அந்தச் சின்னத் தலையில் என்ன எண்ணங்கள் மலருகின்றனவோ என்று வியக்கின்றோம். மூளையின் வளர்ச்சியால் அது தெரிந்துகொள்ளும் ஒவ்வொரு புதிய பொருளுக்கும் மகிழ்ச்சி அடைகின்றது. ஏதோ அரியது ஒன்றைப் பெற்றதைப் போன்ற மகிழ்ச்சி அதற்குத் தோன்றுகின்றது. நாமும் அந்தக் குழந்தையின் மூளை வளர்ச்சியைக் கண்டு வியந்து பாராட்டுகின்றோம்.

மனித இனத்தின் பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகளை ஆராய்ந்து அது படிப்படியாகப் பெற்று வந்த உயர்வை—வளர்ச்சியை அறியும்போதும் நமக்கு வியப்பு மேலிடுகின்றது.

தமிழ் மொழியில் எவ்வளவோ அழகுகள் இருக்கின்றன என்று காட்டுவர். தமிழின் சிறப்பைப் பற்றிப் பேசுவர். அவையெல்லாம் ஒருபுறம் இருக்க, தமிழ்மொழியில் உள்ள சொற்களை ஆராயும்போது தமிழனின் மூளை வளர்ச்சியை நாம் காண இயலுகின்றது.

தமிழ் மொழியில் அமைந்திருக்கும் வியக்கத் தக்க சிறப்புக்களைப் பற்றிப் பலர் போற்றியுள்ளனர். எழுத்து, சொல், சொற்றொடர், அணி, இலக்கண அமைதி ஆகிய இத்துறைகளில் எல்லாம் தமிழில் இனிமையோடுங் கூட எழிலும் காணப்படுகின்றது. சொல் அழகு மிக்க மொழிகள் என்று மட்டும் சொல்லக் கூடிய வகையில் உலகில் பல மொழிகள் இருக்கலாம். ஒலியில் உருவத்தில் அமைப்பில் ஒன்றுபட்டுக் காணப்படும் சொற்களின் அழகுணர்ச்சியும், பொருளின் நுட்பத்தைக் குறிக்கவும், பல சிறு சிறு பகுதிகளை உணர்த்தவும் என்று சொற்களின் இயல்பு எந்த மொழியிலும் உண்டு.

இப்படிச் சாதாரணமாக இருக்கும் சிறப்பைவிட் தமிழ் மொழியில் உள்ள சொற்களில் வேறு ஒரு அழகையும் கண்டு வியக்கின்றோம். ஏதேனும் ஒரு தமிழ்ச் சொல்லை நினைவு கூர்ந்து எண்ணத்தினை அச் சொல்லிலேயே சுழன்று வரச் செய்யும்போது அந்தச் சொல் வெறும் எழுத்துக்களின் கூட்டமாக இராமல், அல்லது ஒரு பொருளை உணர்த்தும் குறியீடாகமட்டும் இராமல் பெரிய அறிவுக் கருவூலமாக இருப்பதனைக் காணுகின்றோம்.

மனிதனுடைய மூளை பெற்ற வளர்ச்சி அந்த ஆராய்ச்சியில் தெளிவாகப் புலனாகும். மூளை வளர்ச்சியுறுமுன் நிகழ்த்திய போராட்டங்கள், அடைந்த தடுமாற்றங்கள், இவைகளுக்கு மேலாகக் கிடைத்த வெற்றிகள் இவையெல்லாம் ஒரு சிறிய சொல்லுக்குள் பொதிந்துகிடக்கக் காணலாம்.

தொடக்கத்தில் ஏதோ சிலவற்றை மட்டும் தெரிந்துவைத்திருந்தவன் படிப்படியாகப் பலவற்றைத் தெரிந்துகொண்டுதான் அறிந்தவற்றையெல்லாம் உணர்த்தியிருக்கின்றான். நாள்தோறும் சிறு சிறு-தொகையாகச் சேர்த்து ஆண்டுகள் பலவான பின்னர் பெருந்தொகை ஆயிற்று என்பதுபோல், பல காலம் கொஞ்சங் கொஞ்சமாக முயன்று முயன்று படைத்த படைப்பெல்லாம் சேர்ந்து தமிழ் மொழியின் கடல் போன்ற பரப்பாகியுள்ளது. இந்தக் கடல் உருவாவதற்குத் துளி துளியாகச் சேர்ந்த திவலைகளை எண்ணும்போது மகிழ்ச்சி வியப்பு பெருமிதம் எல்லாம் சேர்ந்து தோன்றுகிறது.

ஒன்று — ஒரு — முதல் இவை மூன்று சொற்களாக இருப்பினும் இவை குறிக்கும் பொருள்கள் ஒன்றே.

ஒன்று சொன்னான்

ஒரு பையன்

முதல் வீடு

என்று இவை மூன்று இடங்களில் மூன்று வகையான பொருள் உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றன.

ஒரு—ஒன்று என்ற இரண்டும் ஒரு சொல்லின் வேறு வேறு வடிவங்கள் என்பர் மொழி நூலார். ஒன்று என்ற சொல்லே **ஒரு** எனக் குறுகி அந்தக் குறுக்கம் **ஒரு**

என்று ஆயிற்று என்கிறார்கள். ஒரு என்ற சொல்லில் பொருள் முடியாததுபோன்ற ஒரு உணர்ச்சி இருக்கின்றது. ஒரு என்றால் அதற்குப் பிறகு ஏதேனும் பெயர் வந்து

ஒரு மரம்,

ஒரு மனிதன்,

ஒரு சொல்

என்று இதைப்போல் முடிய வேண்டியிருக்கிறது.

ஆனால் ஒன்று என்பதோ முடிவு கட்டுவதாக இருக்கிறது.

இது ஒன்று என்று பொருளை முடிக்கும் சொல்லாகவே வருகின்றது.

இப்படி இத்தனை என்று எண்ணிக் காட்டுவதோடு மட்டும் அல்லாமல் இதிலே இருந்து இந்த ஒன்று என்ற சொல் உணர்த்தும் வேறு பொருளையும் காணுவோம்.

அவனோடு இவன் ஒன்றினான் என்ற சொற்றொடரில் இரண்டு பேரும் தனித்தனியாக இல்லை, ஒன்று ஆயினர் என்று கூறுவது தெரிகின்றது. இரட்டை நீங்கி ஒற்றை வந்தது என்பதை ஒன்று என்ற பெயர்ச்சொல் வினைச் சொல்லாக மாறி உணர்த்துகின்றது.

இங்கே எண்ணப்படும்போது ஒன்றாக இருப்பதுபோல் ஒன்றிய இருவர் ஒன்றாக ஒரே உடலாக இருப்பதில்லை. ஆனால் அவர்களுக்குள்ளே பகைமை நீங்கி வேற்றுமைகள் குறைந்து ஒன்றாகும் தன்மை வருகின்றது. எண்ணங்கள் ஒரே தன்மையை உறுகின்றன. பருப்பொருளாக உருவத்திலே ஒன்று என்று உணர்த்திய முறை மெல்ல ஒருபடி வளர்ச்சி பெற்றுக் கருத்தின் ஒருமையை உணர்த்துகின்றது. கண்ணுக்கு எட்டிய பொருளில் இருந்து கண்ணுக்கு எட்டாத பொருளின்மீது அந்தச் சொல்லின் ஆட்சி வந்தது. இது பெரிய வளர்ச்சி. இதை அடைவதற்கு முதல் முதலில் பெரிய முயற்சி வேண்டியிருந்திருக்கும்.

ஒன்றினான் என்ற இந்தச் சொல்லின் வளர்ச்சிதான் இன்னும் நுட்பமாக வளர்ந்து ஒற்றுமை என்ற சொல்லைப் படைத்தது.

ஒரு என்பதும், ஒன்று என்பதும் பெரும்பாலும் கண்ணால் காணக்கூடிய வகையில் பொருள்களைக் காட்டுவன. ஆனால் ஒற்றுமை என்பதோ வெறும் எண்ணத்திலே மட்டுமே எட்டக்கூடியது ஆகும்.

ஒற்றுமை என்ற இந்தச் சொல்லையும் ஆராய்ந்தால் புதிய விளக்கங்கள் பெறலாம். இதிலே வரும் மை என்ற எழுத்து வெறும் தனி எழுத்தாக இல்லாமல் ஒரு சொல்லின் அடையாளமாகவே இருக்கிறது என்று சொல்லுவார்கள்.

ஒன்றும் தன்மை, என்பது ஒற்றும் தன்மை என்று மாறி ஒற்றுமை என்று இறுதியாக வடிவம் பெற்றது என்று சொல்லுவார்கள்.

தன்மை என்பது தனிச்சொல்லாக இல்லாமல் வேறு ஒரு சொல்லோடு சேர்ந்துவந்து ஒரு பொருளினுடைய குணத்தை விளக்கிவரும். அதனால் அது அடிக்கடி பழக்கத்தில் வருகின்றது. அடிக்கடி பழக்கத்தில்கையாளப்படும் ஒன்று நீளமாக இருந்தால் குறுக்கப்படுவது இயற்கை. நாள் தோறும் ஒருவன் ஒரே வழியில் செல்ல நேர்ந்தால் மெல்ல மெல்ல குறுக்கு வழிகளைக் கண்டுபிடிப்பதைக் காணுகின்றோம். மொழியிலும் அதேபோல் பல சொற்கள் நீண்டிருப்பதை விட்டுக் குறுக்கம் பெறுவது உண்டு.

தன்மை என்ற இந்தச் சொல்லும் மை என்று குறுகிப் பொருளை உணர்த்துகின்றதை நாம் பல சொற்களில் காணுகின்றோம்.

நீர்மை—நீரின் தன்மை

பன்மை—பலவாகிய தன்மை

பொறுமை—பொறுத தன்மை

நன்மை—நல் தன்மை

தீமை—தீத்தன்மை

காணாமை—காணாத தன்மை

கருமை—கரிய தன்மை

வெண்மை—வெண் தன்மை

என்று இதைப்போல கணக்கற்ற சொற்களில் வெறும் மை என்ற எழுத்தே தன்மை என்ற பொருள் தருகின்றதைக் காணுகின்றோம்.

அவ்வாறுதான் ஒற்றுமை என்பதில் ஒன்றுபடும் தன்மை என்று பொருளைப் பெறுகின்றோம்.

ஆறு என்ற சொல்லுக்குத் தமிழில் சாதாரணமாகப் பல வகைப் பொருள் உண்டு,

ஆறு பழங்கள்

வைகை ஆறு

நல்ல ஆறு (ஒழுக்கம்)

அவ்வாறு (விதம், முறை)

சைவ ஆறு (நெறி)

ஆறுபடுத்து (வழியனுப்பு)

இவை ஆறு என்ற சொல் உணர்த்தும் சில வகையான பொருள் முறைகள்.

தனித்தனியாக இவை ஏதோ வேறு வேறு வகையான சொற்களைப்போல் காணப்படினும் நுட்பமாக ஆராய்ந்தால் இவை அத்தனையும் ஒரே சொல்லின் வேறு வேறு உருவங்கள் என்பதனை விளங்கிக்கொள்ளலாம்.

ஆறு என்ற சொல்லுக்கு வழங்கி வரும் இத்தனை பொருள்களையும் ஆராய்ந்தால் இவற்றில் எல்லாம் வழி என்ற பொருள் இருப்பதைக் காணலாம். இப்படி முதன் முதலில் வழியைக் குறிக்கப் பயன்பட்ட இந்தச் சொல் நாளடைவில் நீரின் வழி என்று ஆற்றையும் மனம்செல்லும் வழி என்று சமயத்தையும் படிப்படியாக ஒவ்வொரு துறையிலும் பொருள் விளக்கம் செய்யலாயிற்று.

ஆனால் எண்ணுகின்றபோது ஆறு என்பது எப்படி வந்தது என்றால் முதலில் ஐந்து விரல்களை மட்டுமே அளவாக வைத்து மனிதன் எண்ணிக்கையை நடத்தினான் என்றும் பிறகு மற்றொரு கை விரல்களையும் சேர்த்து எண்ணலாம் என்றும் புதிதாகக் கண்டுபிடித்து ஐந்

பொதுமக்கள் கருத்திற்கு ஆச்சரியப்படத்தக்க சக்தி உண்டு. அந்தக் கருத்து செயலாற்ற முற்பட்டுவிடுமானால், அதனை எதிர்த்துப் போரிட வேண்டுமென்று கற்பனைசெய்து பார்க்கிறவர்கள்கூட அதற்குப் பயந்து போகிறார்கள்.

—டோக்குவேவில்லே.

துக்குப் பிறகு ஆறு என்று புது வழியாகக் கணக்கிடத் தொடங்கினான் என்றும் மொழிநூல் உடையார் கூறுவர்.

இப்படிப் படிப்படியாகமூளையின் விரிவுபோல் சொற்களின் விரிவினால் ஒத்தவகைப் பொருள்கள் பலவாகப் பெருகி மொழி வளம் பெறுவதைக் கண்டால் தமிழ் மொழியின் வளத்தை வியக்கலாம்.

மலை என்ற சொல்லைக் காணுவோம்:

அது ஒரு மலை

என்கிறபோது மலை என்பது பெயர்ச் சொல்லாக இருந்து ஒரு பொருளைக் குறிக்கின்றது, மலை என்று சொன்ன உடன் பெரிய ஒரு தோற்றம் கண்ணுக்குப் புலனாகின்றது. பெரிய பெரிய பாறைகளும் ஓங்கி உயர்ந்த மரங்களும் இன்ன பிறவுமாக ஒரு வியப்புணர்ச்சி உண்டாகின்றது. பெரியது இந்தப் பொருள் என்று ஏதாவது ஒரு பொருளைச்சொல்ல வேண்டுமானால் புலவர்கள் 'மலைபோன்றது' என்றுதான் உவமை காட்டுகின்றார்கள்.

மலைபோன்ற தோள்கள் என்று இலக்கியத்தில் அடிக்கடி காணப்படும். மலை என்று எண்ணியவுடனே ஒரு வியப்பு மனிதனுக்குத் தோன்றுவதால் நாளடைவில் வியப்பானதையெல்லாம்கூட மலையோடு சேர்த்து எண்ணினான். வியப்பு என்ற சொல் உணர்த்தும் பொருளை மலை என்ற சொல் உணர்த்தும் வண்ணம் அதனைக் கையாண்டான்.

மலைத்துப் போனான் என்ற தொடரில் மலை என்ற சொல் வியப்பு என்றுதான் பொருள் படுகின்றது.

களைப்பு என்ற சொல்லோடுஒரு மனிதனைச் சேர்த்துச் சொல்லும் போதுகளைத்துப்போனான்என்றால் களைப்பு மிகுதியாயிற்று என்று பொருள், அதேபோல் மலைத்துப் போனான் என்பதிலும் மலை என்ற சொல்லுக்குக் குன்றம் என்றே பொருள் கொண்டால் அந்தத் தொடர் பொருந்தாமல்போகிறது. ஆகவே அதற்கு வேறு என்ன பொருள் இருக்கக்கூடும் என்று ஆராய்ந்தால் 'வியப்பு' என்ற பொருளைக் காணுகின்றோம்.

'அதனைக் கண்டு வியந்தான்' என்று சொல்லலாம். அப்படிச் சொன்னால் வியப்புணர்ச்சி அதிகமாகத் தெரியவில்லை. காரண காரிய ஆராய்ச்சி செய்து பெருமையைப் பாராட்டினான் என்று மட்டும்தான் தெரிகின்றது.

ஆனால்,

அதனைக் கண்டு மலைத்துப் போனான்

என்றுசொன்னால்அந்தவியப்புபல மடங்காக வெளிப்படுகின்றது. தன்னை மறந்து அதன் பெருமையில் ஈடுபாடுகொண்டு வியந்தான் என்று மிகுதிப் பொருள் தெரிகின்றது. வியந்தான் என்பது கற்பனை கலவாமல் சொல்லும் முறையாக இருக்கிறது. மலைத்தான் என்பதோ கலையழகு பொருந்தக் கூறுவதாக அமைகின்றது.

மலையிலே சிறியதைக் குன்று என்பது வழக்கம். குன்று என்றால் சின்ன அளவுடைய மலை என்ற சாதாரண பொருள் முதலில் அமைந்திருக்கும். அந்த நேரத்தில் பல சிறிய பொருள்களை 'சிறியது' என்று எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை வந்தது. காட்டிலே கிடைத்த பல மணிகளில் மிகச்சிறிய மணி ஒன்று அவன் கண்ணுக்குக் கிடைத்திருக்கிறது. அதைச் சின்ன மணி—சிறுமணி என்று எப்படியெப்படியோ சொல்லிப் பார்த்து மனம் திருப்தியுறாமல் இதை எப்படிச் சொல்லுவது என்று பலநாள் ஏங்கி வாடினான். ஒருநாள் அவன் மனம் பல எண்ணியது. "மலைகளில் சிறியதைக் குன்று என்கிறோம். ஆகவே குன்று என்றால் சிறியது என்று பொருளாகின்றது. இந்த மணி சிறியதாக இருக்கிறது இதையும் குன்றுமணி என்றே சொல்லுவோம்" என்று முடிவு கட்டி இந்தப் பெரிய வெற்றியைப் பல நாள் நினைந்து மகிழ்ந்திருந்திருப்பான். பின்னர் வந்தவர்கள் குன்றிமணி என்று அதில் கொஞ்சம் திருத்தம் செய்தனர். இந்தக் காலத்தில் நாம்பல பெயர்களை அவற்றின் பொருளறியாமல் சிதைத்ததைப்போல் இதனையும் 'குண்டுமணி' என்று ஆக்கிவிட்டோம்!

சிறியதைக் குறிக்கக் குன்று என்ற சொல் பயன்பட்டது ஒரு படி. அதற்குப் பிறகு மற்றொரு வளர்ச்சி ஏற்பட்டது. குன்று என்றால் கண்ணால் காண முடிகின்றது — குன்றிமணியையும் காணுகின்றோம். ஆனால் கண்ணால் காண இயலாத பொருள்களும் உள்ளன. அவற்றை உணர்த்த வேண்டிய தேவை வந்தது.

பழி உறாதபோது ஒரு மனிதன் நிமிர்ந்து நடக்கின்றான். அவன் மனம் வளர்ந்து நிற்கின்றது. ஆனால் அவன் திருடினான், பொய் யுரைத்தான், என்பன போன்ற ஏதேனும் பழியுறும்போது அவன் உடல் தளர்ந்துவிடுகிறான்; நிமிர்ந்து நடக்க இயலவில்லை, தலை கவிழுகின்றது—மனம் விரிய இயலவில்லை— சிறியவனாகிவிட்டதைப்போல் உணருகின்றான். இது மிக நுட்பமான வேறுபாடு. இதனைத் தெரிவிக்க வேண்டும் என்று முதலில் எண்ணியவன் பெரும்பாடுபட்டிருப்பான்.

பிறகு ஒருநாள், குன்று என்றால் சிறியது என்று பொருள் ஆயிற்றே, இங்கேபழியுற்றவனும் முன்னே இருந்ததைவிடச் சிறியவன்—மனத்தளவில் — ஆகிவிடுகின்றானே இவனைக் குறிக்கவும் அந்தச் சொல் பயன்பட்டால் என்ன என்று நினைக்கின்றான்.

'மனம் குன்றினான்' என்று ஒரு புதிய தொடர் பிறக்கின்றது. கருத்து அழகுற வெளிப்படுகின்றது.

இதைப்போல் தமிழில் உள்ள பல சொற்களை ஆராய்ந்தால் மனிதனின் மூளை வளர்ந்த வளர்ச்சியைக் கண்டு வியக்கலாம், மகிழலாம். தமிழ்மொழி வளமான மொழி என்பது, இதைப்போன்ற வற்றாத பேரூற்றுகளாக அதன் சொற்கள் இருக்கின்ற காரணத்தினால்தான். ஆற்றின் மணலில் தோண்டியதும் நீர் சுரத்தலைப் போல், தமிழிலும் ஒரு புதிய கருத்தை, பொருளை உணர்த்த வேண்டும் என்று முயன்றால் உடனே சொற்கள் புதிது புதிதாகச் சுரக்கின்றன.

சின்னஞ் சிறிய விதையினின்றும் பெரிய ஆலமரம் தழைத்துப் படர்ந்து விழுதுகள் விட்டு எல்லை விரிந்து எழிலார் உருவம் பெறுவதைப் போல் தமிழ் மொழியின் சொற்களும் பல வகையில் கிளைத்துப் படர்ந்து நாற்புறமும் நிறைந்து மொழிக்கு அழகும் உயிரும் ஊட்டுகின்றன; காலத்தை வென்று நிற்கும் பேராற்றல் பெற்று மிளிர்கின்றன. ஆகையினால்தான் தமிழ் வளமார் தமிழ் என்ற சிறப்பு பெறுகின்றது. ★

தேர்தல் கற்பித்த பாடம்!

சட்ட சபையில் 112 ஸ்தானங்களுக்குத் தனது அபேட்சகர்களை நிறுத்திப் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகம் 15 ஸ்தானங்களையே கைப்பற்றி யிருக்கிறது. ஆயினும் தி. மு. க. வுக்குக் கிடைத்துள்ள மொத்த வோட்டுகளையும், காங்கிரஸுக்கு கிடைத்துள்ள வோட்டுகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எடுத்த எடுப்பிலேயே தி. மு. க. வுக்கு நாட்டில் நல்ல வரவேற்பு இருப்பதைக் காணலாம்.

சட்ட சபையில் 151 ஸ்தானங்களைக் கைப்பற்றிய காங்கிரஸ், நாட்டில் பதிவான மொத்த வோட்டுகளில் 44 சதவீதமே பெற்றிருக்கும் போது, 15 ஸ்தானங்களைக் கைப்பற்றிய தி. மு. க. வுக்கு 14 சதவீத வோட்டுகள் கிடைத்திருக்கின்றன! இதில் மறைந்திருக்கும் உண்மை என்ன? தமிழ் நாட்டிலே தேர்தல் முனையில் தி. மு. க. வுக்குக் கிடைத்துள்ள ஆதரவைப்போல் இரண்டு பங்கு அதிகமான ஆதரவே காங்கிரஸுக்குக் கிடைத்திருக்கிறது. அதாவது மூன்றுக்கு ஒன்று விதாசாரத்தில் (3 : 1) காங்கிரஸும் தி. மு. க. வும் வாக்காளர் ஆதரவைப் பெற்றுள்ளன. ஆதலால், 201 ஸ்தானங்களுக்குப் போட்டியிட்டு 151 ஸ்தானங்களைக் கைப்பற்றிய காங்கிரஸ், 100க்கு 73 வீதம் வாக்காளர் ஆதரவைப் பெற்றுவிட்டதாக நினைக்க முடியாது. 112 ஸ்தானங்களில் போட்டியிட்டு, 15 ஸ்தானங்களைக் கைப்பற்றிய தி. மு. க. தேர்தல் முனையில் படுதோல்வி அடைந்துவிட்டதாகப் பறை சாற்றுவதும் சரியில்லை.

பதிவான வோட்டுகளில் நூற்றுக்கு நாற்பத்து நான்கு வீதம் கிடைக்கப் பெற்ற காங்கிரஸ் கட்சியினர் சட்ட சபையில் 73 சதவீத ஸ்தானங்களைக் கைப்பற்ற முடிந்தது எப்படி? பல முனைப் போராட்டங்களாலேயே பல தொகுதிகளில் காங்கிரஸ் அபேட்சகர்கள் வெற்றி அடைந்திருக்கின்றனர் என்பதை அந்தந்தத் தொகுதிகளில் பதிவான வோட்டு விபரங்களைக் கொண்டே உறுதிப்படுத்தலாம். காங்கிரசை எதிர்த்தவர்கள் மூன்று முக்கிய கட்சியினராகவும், இன்னும் பலர் சுயேச்சைகளாகவும் இருந்ததால் காங்கிரஸ் வெற்றி பெறுவது கடினமாகத் தோன்றியதாயினும் கடைசியில் காங்கிரஸ் அபேட்சகர்களே வெற்றிபெற்றனர். பல தொகுதிகளில் தி. மு. க. அபேட்சகர்களால் காங்கிரஸுக்கு வெற்றி கிடைத்துள்ளது. மற்றும் பல தொகுதிகளில் சுயேச்சையாளர்களின் தலையீட்டினால் தி. மு. க. தோழர்கள் தோல்வியடையவும், காங்கிரஸ் வெற்றி பெறவும் நேர்ந்துள்ளது.

காங்கிரஸுக்கு எதிர்க்கட்சிகளான தி. மு. க. வும் கம்யூனிஸ்டும் சுயேச்சையாளர்களும் காங்கிரஸுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது போதாதென்று காமராஜிடம் மனத்தாபங்கொண்டு காங்கிரஸிலிருந்து வெளியேறிய கா. சி. க. அபேட்சகர்களும் அநேக இடங்களில் காங்கிரஸ் வெற்றிபெற வழி வகுத்துத் தந்தனர். இப்படித்தான் 100க்கு 44 வீதம் வாக்காளர் ஆதரவைப் பெற்ற காங்கிரஸ் கட்சி சட்ட சபையில் 100க்கு 73 ஸ்தானங்களைக் கைப்பற்ற முடிந்தது!

பணமும் பதவியும் பக்க பலமாக நின்று காங்கிரஸுக்கு வெற்றி அளித்த பல தொகுதிகள் தமிழ் நாட்டில் உண்டு. சர்க்கார் ஊழியர்களுக்கு சந்தர்ப்பம் பார்த்து பஞ்சப்படியை உயர்த்தியதால் பல லட்சம் வோட்டுகள் மாட்டுப் பெட்டியில் விழுந்திருக்கவேண்டும்.

இந்தப் பொதுத் தேர்தலில் தி. மு. க. ஈடுபடாமல் இருந்திருந்தால் தமிழ் நாட்டின் தேர்தல் செய்திகள் உப்பும் உரைப்பு மில்லாமல் சப்பென்றுதான் இருந்திருக்கும். காங்கிரஸ் கட்சியினரின் வெற்றியும் சுலபமாக முடிந்திருக்கும்.

தி. மு. க. தேர்தலில் ஈடுபட்டதால் நாட்டில் ஒரு விழிப்புணர்ச்சியும், அரசியல் விஷயத்தில் மக்களுக்கு அக்கறையும் ஏற்பட்டன. இனிமேல் சட்டசபை நிகழ்ச்சிகளும் சென்னை ராஜ்ய மக்களின் செவிக்குணவாக இருக்குமென்பதில்சந்தேகமில்லை. தி.மு.க.வின் சார்பில் சொல்லின் செல்வர்கள் பலர் சட்டசபைக்கு வந்துள்ளனர். தோழர் அண்ணாதுரை அன்பழகன் போன்ற படித்தவர்களையும் செயல் திறமை படைத்தவர்களையும் சட்டசபைக்கு அனுப்பிவைத்தவாக்காளர்களைத் தமிழ்நாடு வாழ்த்தும் என்பதில் சந்தேகமில்லை.

இத் தேர்தலில் கம்யூனிஸ்ட்டுகளின் கோட்டைகள் பல தகர்ந்துவிட்டன. இவர்களின் கோட்டைகளைத் தகர்த்த பெருமையில் பாதி தி. மு. க.வுக்கு மற்றொரு பாதி காமராஜுக்கு.

இத் தேர்தலின் மூலம் தமிழ் நாட்டுக்கு ஒரு நல்ல படிப்பினை கிடைத்திருக்கிறது. எந்தக் கட்சியிலும் சேராமல் சுயேச்சையாக நின்று போட்டியிடுபவர்களை வாக்காளர்கள் ஆதரிப்பதால், நாட்டிலுள்ள சிறுபான்மை மக்களின் ஆதரவைப்பெற்ற கட்சியே சட்ட சபைகளில் பெரும்பான்மை ஸ்தானங்களைக் கைப்பற்ற முடியும் என்பதற்குத் தமிழ்நாடு ஒரு எடுத்துக்காட்டாகவிளங்குகிறது. இதைப்போல் ஜனநாயகத்துக்கு ஊறு விளைவிக்கும் காரியம் வேறு எதுவும் இருக்க முடியாது. எனவே எதிர்காலத்திலாவது சுயேச்சைகளை ஆதரிப்பதில்லை என்று வாக்காளர்கள் ஒரு திடமான முடிவு செய்துகொள்ள வேண்டும். அப்படிச் செய்து கொண்டால் எவரும் சுயேச்சையாக நின்று ஜாமீன் தொகையைப் பறிகொடுக்க முன்வரமாட்டார்; ஜனநாயகத்துக்குக் குழி தோண்டவும் துணியமாட்டார்.

—முஸ்லிம் முரசு

★

திருமணம்

★

இலங்கையில் நமது இயக்க ஏடுகளின் விற்பனையாளரான தோழர். வி. எஸ். முருகன் அண்டு கோ நிர்வாகி தோழர் மு. கா. இராசனுக்கும் தோழியர் தாயுமான சுந்தரிக்கும், கடந்த 19—4—57-ல் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

வங்க இராமாயணம்

"என்னைக் கவர்ந்த புத்தகம் எதுவென்று கேட்பீர்கள். கவர்ந்தது மட்டுமல்ல சிறு வயது முதல் கவனத்திலேயே நிலைத்து நிற்கும் நூல்களில் முதலிடம்பெறுவது "மேகநாத பாத்" என்பதாகும். வங்காள மொழியில் இயற்றப்பட்ட இக்கவிதை நூலை எனது 11, 12-வயதில் படித்தேன். இன்னும் அது என் மனதைவிட்டு மறையவில்லை" என்று "ஹிதவாடா" எனும் ஏட்டில் பேராசிரியர் ஹூமாயூன் கபீர் என்பார் குறிப்பிடுகிறார். இவர், கல்வித்துறையில் பேர் பெற்ற அறிஞர். அவரைக் கவர்ந்த அந்நூல் எதைப்பற்றியது தெரியுமா? நாட்டோரால் போற்றப்படும் இராமாயண காதைதான். ஆனால் அதனை வங்க மொழியில் தீட்டிய கவிஞர், 'கபகர்' வேலை செய்யவில்லை. கவிஞரின் அனுதாபமும் சிந்தனையும் சீதையின்பாலும், இராவணனிடமும், அவனது படைவீரர்கள் வசமும், மகன் மேகநாதன் வசமும் சென்றதால், அவர்களைப்பற்றியே அமைந்துவிட்டது நூல். அந்த இடமே என்னைக்கவர்ந்தது என்கிறார், பேராசிரியர். "அடி அகலியா! நான் என் கணவனால் பட்டபாடுபோதுமடி. அசோகவனத்தில் கிடந்தேன். அது முடிந்ததும், தீயில் இறங்கச் சொன்னார் என் கணவர். பட்டாபிஷேகம் முடிந்து நான் கர்ப்பவதியாயிருந்த போது, கானகத்துக்கே துரத்தினார்!" என்று 'நீதிதேவன் மயக்கம்' நாடகத்தில், சீதை புலம்புவதாகக் சித்தரித்துள்ளோமல்லவா? அதைக் கண்டு சினுங்குவோர், வங்கக் கவிஞரின் நூலினைப் படித்தால் என்ன கூறுவரோ! "இராமனும், இலட்சுமணனும் வீரனா" என்று கேட்கிறாராம், கவிஞர், அந்நூலில். உண்மையான வீரர்கள் என்றால், இதோ மனக்கண் முன்பு தென்படுகிறானே இராவணன் அவனையன்றோ குறிப்பிட வேண்டும்? தென்னிலங்கை வேந்தன், சிம்மக் குரலோன், எளியார்மீதா படையெடுத்துச் சென்றான் இராமனைப் போல! அவனுடைய தம்பி கும்பகர்ணன் என்ன, அண்ணன் சொல் கேளா அசடனாகவா இருந்தான்! தமக்கு அவமானமும், தமது எல்லைக்குள் அந்நியர்பிரவேசமும்ஏற்பட்டது என்றதும் வாளும் வேலும் கொண்டு ஆர்ப்பரித்துக் கிளம்பிய அடலேறு அன்றோ இலங்கேசுவரன். அவனுடைய போராட்டத்தில், சுதந்திரக் கனல் அன்றோ தெரிக்கிறது! அவனுக்கும் வாய்த்தானே தம்பியாக, விபீடணன். செச்சே! தம்பியா, அவன்? துரோகி!—என்று அக்கவிஞர், கூறுகிறாராம், நூலில். இது, இன்னும் என் கவனத்தை விட்டு மறையவில்லை என்கிறார் பேராசிரியர்.

"தந்தையின் கட்டளையை சிரமேற்கொண்டு செத்துக் காட்டினானே, மேகநாதன், அவனைப்போல ஒரு வீரனைக் கூறமுடியுமா? அப்பா கட்டளையிட்டார் என்றதும் பாயும் புலி போல் பாய்ந்து நாட்டையும் தன் மானத்தையும் காக்கப் போரிட்டு மாண்டானே அவனன்றோ, உண்மை மைந்தன்", என்றும் இந்திரசித்தனைப் பற்றி, வெகுவாகப் பாராட்டுகிறாராம், கவிஞர். நூலே மேகநாதனின் பெயரைக்கொண்டு ஆக்கப்பட்டிருக்கிறது.

"எனக்கு நம்நாட்டின் மீது ஆழ்ந்த பற்றும், விடுதலைக்காகப் போராடியவர்களைப் பூஜிக்கும் மனோபாவமும் ஏற்படக்காரணம், இந்த நூலேயாகும்", என்கிறார் ஹூமாயூன் கபீர். அவர் பேராசிரியர். டில்லி சர்க்காருக்கு கல்வித்துறையில் ஆலோசனை வழங்கிடும் ஆற்றல் கொண்டவர், இன்று அமைச்சரும் கூட! அவருடைய இளம் உள்ளத்திலே இலட்சிய உருவமாக அமைந்தவன் இராவணனும் அவன் மைந்தனுமாம்! அந்நூலைப் படித்ததால் என்னுள்ளத்தில் சுதந்திர வேட்கையும் அதற்காகப் போராடும் மக்களிடம் பற்றும் உண்டாயிற்று என்கிறார்!!

இராமன்—இலட்சுமணன்—ஆகிய புண்ணிய புருடர்களைப் பற்றி படிக்க வேண்டும். அப்போதுதான் குழந்தைகள் மனதில் ஒழுக்கம் உருவாகும் என்கின்றனர், இங்குள்ள இராமாயணப் பிரசங்கிகள்.

வங்கப் பேராசிரியர்—இராவணன் மேகநாதன்—ஆகியோரே இலட்சிய உருவங்கள் என்கிறார்! உள்ளத்தில் வீரமும் நாட்டுப்பற்றும் எனக்கு உருவாயிற்று என்கிறார்!!

வங்க மொழியில், இப்படியொரு இராமகாதையை யாத்தவரின் பெயர் மதுசூதன் என்பதாகும். இங்குபோல அங்கும் இராவணனின் மாட்சியைப் பற்றி எழுதும் ஆசை ஏற்பட்டதை எண்ணிடல் வேண்டும், நம்மைக் காய்வோர்.

இராவணன் தென்னிலங்கை வேந்தன்—கல்வி கேள்வியில் வல்லான்—சிறந்த நெறியாளன்—திராவிட மன்னன் — அவனுக்கும் இராமனுக்கும் ஏற்பட்ட போர், ஆரிய — திராவிட கலாச்சாரங்கள் மோதிக்கொண்ட வரலாறாகும். இதனை மறந்து, இராமனுக்குப் புகழும், இராவணனை இரக்கமிலா அரக்கனாகவும் சித்தரித்தது, அதை நம்பி வருவது, நல்லதல்ல—என்று நாம் இங்கே எடுத்துக்கூறி வருகிறோம்.

இதற்கு, அப்பப்பா, எவ்வளவு எதிர்ப்பு! எத்துணைப் பட்டங்கள்!!

அந்நூல் எனக்கு வீரமும் தேசப் பற்றும் தந்தது, என்கிறார் பேராசிரியர். இப்படியொரு நூல் எழுந்தமைக்காக வங்கம் பொங்கும் கடலாகிடவில்லை! ஏசலும் தூற்றலும் எழும்பிடவுமில்லை!! இலக்கியத்திற்கு ஒரு புது விருந்து—என்கிற அளவில், இருந்துவிட்டது. ஆனால் இங்கோ?

★

சுதந்திரத்தையும் சமத்துவத்தையும்ஜனநாயகத்தில்தான் காண முடியும் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் எங்கே எல்லா மக்களும் அரசாங்க நிர்வாகத்தில் ஒரே மாதிரியான பங்குகொள்ள முடிகிறதோ, அங்கேதான் உண்மையான ஜனநாயகத்தை அடைய முடியும்.

—அரிஸ்டாட்டல்.

ஒற்றுமையால் உயர்ந்த நாடு

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகிய ஸ்விட்சர்லாந்து நிலப்பரப்பில் இங்கிலாந்து, பிரான்ஸ் இவைகளைக் காட்டிலும் சிறியதாகும். பரப்பிற் சிறியதேயாயினும் மக்களாட்சியின் பல துறைகளில் ஒரு துறையைப் பின்பற்றி வெற்றிகரமாக ஆட்சி நடத்தும் தன்மையால் உலகத்தின் கவனத்தையெல்லாம் தன்பால் ஈர்த்த நாடாகும் அது. இந் நாட்டின் ஜனத்தொகை ஏறத்தாழ நான்கு மில்லியனாகும். பல பாங்கரும் விரிந்த மலைத் தொடர்கள் இந் நாட்டின் நான்கில் ஒரு பாகத்தை உற்பத்திக்கு லாயக்கற்றதாகச் செய்துவிட்டன. இதனால் ஒரு நாட்டின் அடிப்படைத் தேவைகளான நிலக்கரி, இரும்பு,உணவுத் தானியங்கள் இன்ன பிற பொருட்களை வேறு நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் உள்ளது இந் நாடு. இவ்வாறு இறக்குமதி செய்யப்பட வேண்டிய பொருள்களின் செலவினங்களைச் சரிசெய்யும்பொருட்டு ஸ்விட்சர்லாந்து, எண்ணற்ற ஏற்றுமதித் தொழில் நிலையங்களைத் தோற்றுவித்துள்ளது. குறிப்பிடத்தக்க சில ஆண்டுகளிலேயே தொழில் வளர்ச்சியில் இந் நாடு ஒரு உயர்ந்த இடத்தைப் பெற்றுவிட்டது என்றால் மிகையாகாது. அதனுடைய நீர்ச் சக்தியினாலும், நுண்ணிய வேலைப்பாட்டுத் திறமையினாலும், இந் நாடு இறக்குமதி செய்யப்பட்ட கச்சாப் பொருட்களைக் கொண்டு, பூர்த்தி செய்யப்பட்ட பொருள்களை உற்பத்தி செய்து பிற நாடுகளுக்கு விற்பனை செய்யும் திறம் பெற்றுள்ளது. இவ்வாறு பட்டு ரிப்பன்கள், பட்டுத் துணிகள், பருத்தித் துணிகள், கம்பளிகள், பூவேலைகள், லினன், லேஸ் முதலானவைகளையும் உயர்ந்த மின்சாரக் கருவிகளையும் சிறந்த கைக்கடிகாரங்களையும் இந் நாடு தயாரிக்கிறது. இன்று தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்கள் தொகையில் சுமார் 46 சதவிகிதம் மக்கள் உற்பத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். சமூக இன்ஷூரன்ஸ் சட்டங்களை இயற்றியதன் மூலம், ஸ்விட்சர்லாந்து தொழிற் பெருக்கத்தால் ஏற்பட்ட பல நெருக்கடியான பிரச்னைகளை எளிதில் சமாளித்தது.

ஸ்விட்சர்லாந்து மக்களில் இன்னும் நான்கில் ஒரு பாகம் விவசாயத் துறையிலேயே ஈடுபட்டுள்ளனர். இன்னும் அங்குப் பெருவாரியான சிறு சுயேச்சை நிலச்சுவான்தார்கள் இருக்கிறார்கள். இந்நாடு அயல் நாட்டு மூலதனத்தின் மூலமும், பயணத் துறை மூலமும் பெரும்பொருள் ஈட்டுகிறது. 1929-ம் ஆண்டில் மட்டும் இந் நாட்டில் 7800 உணவு விடுதிகள் இருந்தன, 27,40,000 பயணக்காரர்களை (இது மொத்த மக்கள் தொகையில் 65 சதவிகிதம்) வரவேற்று உபசரித்தது. 1934-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வேலையில்லாத நபர்களின் எண்ணிக்கை 52,147. இது 1933-ம் ஆண்டில் வேலையில்லாத நபர்களின் எண்ணிக்கையில் பாதியாகும்.

ஜி. கோதண்டராமன்

ஸ்விட்சர்லாந்து கீழ்க்குறித்த காரணங்களால் வியப்புடன் நோக்கவேண்டிய ஒரு முதல்தர நாடாகும். முதலில் மொழியினாலும், மதத்தாலும் வேறுபட்டிருப்பினும், நெருங்கிய கூட்டு முயற்சியால் ஒரு நாட்டை ஆளமுடியும் என்ற உண்மையைச் செயல்முறையில் நடத்திக் காட்டியதாகும். இரண்டாவதாக சென்ற நூற்றாண்டில் நடந்த ஐரோப்பிய யுத்தங்களிலெல்லாம் பங்குகொள்ளாமல் நடுநிலை வகித்து வெற்றி கண்டதின் மூலம் உலகக் கண்ணோட்டத்தில் ஒப்பற்ற நாடாக அது விளங்குவதாகும். மூன்றாவதாக இச்சிறிய நாடு, அமெரிக்க நாட்டின் நிலையான அரசியல் அமைப்பு முறையையும், பிரான்ஸ் பிரிட்டன் போன்ற நாடுகளின் பொறுப்பான அரசியல் அமைப்பு முறையையும் உள்ளிட்ட, ஒரு அரசியல் அமைப்பு முறையைத் தனக்கெனத் தோற்றுவித்துக்கொண்டதாகும். ஸ்விட்ஸ் நாட்டு அரசியல் அமைப்பு சுருங்கக் கூறின் நேரடியான மக்களாட்சிக் கொள்கைகளின் அடிப்படையில் தோன்றிய ஒன்றாகும்.

ஸ்விஸ் நாட்டு நான்கு மில்லியன் குடிமக்களில், நூற்றுக்கு 71-பேர் ஜெர்மன் மொழி பேசுபவர்கள், 21-பேர் பிரெஞ்சுமொழி பேசுபவர்கள், 6-பேர் இத்தாலிய மொழி பேசுபவர்கள். மிகுதி மக்கள் ரோமன் மொழி பேசுபவர்கள். மதத்தைப் பொருத்தமட்டில் அவர்கள் இன்னும் நேரிய முறையில் பிரிந்துள்ளனர். அவர்களில் நூற்றுக்கு 57-பேர் புராடெஸ்டண்டுகள், சுமார் 41-பேர் கத்தோ

லிக்கர்கள் சிறுபான்மையினர்(0.5) யூதர்கள்காண்டன்கள்என்றுசொல்லப்படும் இருபத்திரண்டு மாநிலங்களில், பன்னிரண்டு காண்டன்களில் பிராடெஸ்டண்டுகள் பெரும்பான்மையினராகவும், மற்ற 10-காண்டன்களில் சிறுபான்மையினராகவும், மற்ற 10-காண்டன்களில் கத்தோலிக்கர்கள் பெரும்பான்மையிராகவும் உள்ளனர். மொழி, மதத்துறைகளில் மேற்கூறிய வண்ணம் வேறுபட்டிருந்தும், ஸ்விஸ் மக்கள் ஒரே மொழியும் ஒரே மதமும் இயங்கும் பிறநாட்டுக்காரர்களைக் காட்டிலும் பரந்த தேசிய உணர்ச்சிமிக்கோராய் ஒன்றுபட்டு வாழ்கிறார்கள்.

ஒற்றுமைக்காகப் போராட்டம். உள்நாட்டு வேற்றுமைகள் பற்பல இருந்தும் அவைகளை ஒருபொருட்படுத்தாது, தேசிய ஒற்றுமையை நிலைநாட்டி ஸ்விஸ் மக்கள் வெற்றி கண்டதின் தலையாய காரணம் என்னவென்றால், அவர்களுக்கு அயல் நாட்டு எதிரிகளிடமிருந்த அச்சமேயாகும். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில், ஸ்விட்சர்லாந்து ரோமானியர்கள், அல்லமேனியர்கள், பிராங்குகள் இவர்களுக்கு நெடுநாட்கள் போர்க்களமாகப் பயன்பட்ட பிறகு, ஜெர்மன் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக இருந்தது. ஸ்விட்சர்லாந்தின் விடுதலை வரலாறு, யூரி ஸ்க்விஸ், அன்டர்வால்டன் என்றமூன்று காண்டன்கள் ஒரு உடன் படிக்கையின் மூலம் ஹாப்ஸ்பர்க்களுக்கு எதிராகச் சில பழைய உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, ஒரு நிரந்தர லீக்கை 1291-ம் ஆண்டு தோற்றுவித்ததில் இருந்துதான் தொடங்குகிறது. 1513-ம் ஆண்டில் இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட கூட்டாட்சியில் முதன் முதலாக 13-காண்டன்கள் சேர்ந்தன. எண்ணற்ற வெற்றிகளையும், நாட்டுப் பாதுகாப்புப் போர்களையும் சந்தித்த பின்புதான் ஸ்விஸ்நாடு 1648-ல் வெஸ்ட்யேலியா உடன்படிக்கையின் மூலம், புனித ரோம் சாம்ராஜ்யத்தினால் சுதந்திரநாடு என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தப் பதின் மூன்று காண்டன்களிடையே ஏற்பட்ட கூட்டுறவு, பல உடன்படிக்கைகளின் மூலம் தோன்றிய போதிலும், மிகச்சிக்கல் நிறைந்தாகவே இருந்தது.

வெளிப்புறத் தலையீட்டைத் தடுக்கும் முறையில், இந்தக் காண்டன்கள் ஒன்றுபட்டதென்றாலும், அவைகள் உடனே ஒன்றுக்கொன்று சச்சரவு செய்ய ஆரம்பித்தன. பதினாறு பதினெட்டாம் நூற்றாண்டுகளுக்கிடையே உள்நாட்டுச் சச்சரவுகளின் காரணமாக ஸ்விட்சர்லாந்தின் வீழ்ச்சிக்கு வித்தூன்றப் பட்டது எனலாம். சர்வ சக்திவாய்ந்த சட்டசபைகளின் ஆளுகைக்குட்பட்ட கிராமப் புறத்துக் காண்டன்களுக்கும், பிரதிநிதித்துவ சர்க்கார்களைக் கொண்ட நகரங்களுக்கும், சலுகை வாய்ந்த குறிப்பிட்ட ஒரு சிலரின் ஆளுகைக்குட்பட்டகாண்டன்களுக்குமிடையே கருத்து வேற்றுமைகள் எழுந்தன. 1291-ம் ஆண்டில் தோன்றிய நிரந்தர லீக் இணைந்த காண்டன்களைச் சரிவர இயக்குவிக்க ஒருவித அரசாங்க இயந்திரத்தையும் தோற்றுவிக்கவில்லை. அந்த லீக் தோற்றுவித்ததெல்லாம் ஒவ்வொரு காண்டனின் பிரதிநிதிகளைக்கொண்ட அவ்வப்போது கூடும் பொதுக்குழுக்கள் அல்லது டையட்டுகள் தான்.

பலம்பொருந்திய இணைக்கும் சக்தியைப் பெற்றிராத காரணத்தால் நிரந்தர ரலீக் பிரெஞ்சுப் புரட்சி தோன்றியதும் கலைக்கப்பட்டது. ஸ்விஸ் நாட்டின் மீது படையெடுத்த பிரெஞ்சுச் சேனை பிரெஞ்சு மாதிரியில் ஒரு குடியரசைத் தோற்றுவிக்கத் தூண்டியது. இதற்கிணங்க 1798-ம் ஆண்டில், நிரந்தர லீக்கின் தலைமையின் கீழ் இயங்கிய காண்டன்களின் கூட்டுத் தொகுப்பு ஹெல்வடிக் குடியரசு என்னும் பெயரோடு கூடிய ஒரு மத்திய அரசாங்கத்திற்கு வழிகோலியது. பாரிஸ் நகரத்தில் தயாரிக்கப்பட்ட இந்தக் குடியரசின் அமைப்பு முறையின்படி, ஸ்விஸ் நாடு காண்டன்களுக்குப் பதிலாக இருபத்திரண்டு ஆட்சிமுறை இலாக்காக்களைக் கொண்ட ஒரு ஐக்கிய நாடாக மாறியது. இவ்வாறு ஸ்விஸ் நாட்டின் ஆட்சி தேசிய சட்ட சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐவரின் கையில்ஒப்படைக்கப்பட்டது.

★

HOME LAND

'திராவிட நாடு' விற்பனையாளர்களுக்கே 'HOME LAND' விற்பனை உரிமையும் தரப்படும். குறைந்தது முன்பணம் ரூ. 25-ம், 25-பிரதிகளுக்கு மேல் தேவைப்படுவோர் பிரதி ஒன்றுக்கு ரூபாய் ஒன்று வீதமும் அதிகமாக அனுப்பிவைக்கவும்.

முன் பணம் கிடைத்ததும் ஏஜன்சி பாரம் அனுப்பிவைக்கப்படும்.

ரூபா 25-க்குக் குறைந்த முன்பணம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சென்னை, மதுரை, திருச்சி, கோயம்பத்தூர், சேலம் போன்ற பெரிய ஊர்களிலுள்ள நமது ஏஜண்டுகள் தனியாக விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும்.

பணம் அனுப்புபவர்கள் தனியாக மானேஜர் "HOME LAND" என்ற முகவரிக்கே அனுப்பும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தோசை

தோசை என்பது நமது சிற்றுண்டிகளில் ஒன்று. காலை நேரத்திலும் மாலை இடைவேளையிலும் அதனை வெகு இன்பமுடன் உண்போம். அரிசிமாவை அரைத்து உழுந்து மாவை உடன்சேர்த்துத் தோசைக் கல்லில் பரப்பிச் சுடுவோம். இரண்டு முறை திருப்புவதால் நன்றாகவெந்து சுவையை மிகைப்படுத்தும். கல்லிலிருந்து எளிதில் எடுப்பதற்காக எண்ணெயோ, அல்லது நெய்யோ கல்லுக்குத் தடவிச் சுடுவர். இந்தத் தின்பண்டம் தென்னாடுகளில் மட்டும் பண்டைய நாள்முதல் இருக்கின்றது. வடநாட்டில் இருக்கவில்லை. அண்மையில் தான் அங்குச் சென்று இருக்கிறது. இது தென்னாட்டுப் பொருள் ஆதலின், அதன் பெயரும் தென்னாட்டுப் பெயராக இருக்கவேண்டும். வடநாட்டுப் பெயராக இருக்கக் காரணம் இல்லை. ஆனாலும் இச் சொல் எந்த மொழியிலிருந்து வந்ததென்று நிச்சயமாகச் சொல்ல ஆதாரம் இல்லை.

தோசை என்பதைப்பற்றி ஒரு கர்ணபரம்பரை நாட்டுக் கதையும் உண்டு. அதனை ஒட்டியே அச் சொல்லுக்கு இலக்கணம் வகுத்துப் பொருளும் உரைப்பார்கள். தோ+ஓசை=தோசை என்றும், தோ+சொய்≈தோசை என்றும் கூறுவார்கள். தோ என்றது துவி என்ற வடமொழியின் திரிபு என்றும், அதற்கு இரண்டு என்ற பொருள் என்றும் கூறி, இருமுறை சொய் என்ற ஓசை அது சுடும்போது உண்டாகிறபடியால் அப்பொருள், தோசை என்று பெயர் பெற்றது என்பர். துபாஷி≈துவி+பாஷி—இரண்டு மொழிகள் பேசுபவன் என்பது இதைப்போன்ற ஒரு சொல். இதைக் குறித்த கதை வருமாறு.

ஒரு வாணிபன் ஆருடம் கற்று வருவதாகத் தன் மனைவியிடம் கூறிக் கட்டுச் சோறு கட்டிக்கொண்டு சென்றான். அவன் போனபிறகு மனைவி தோசை மாவு அரைத்துத் தோசை சுடத் தொடங்கினாள். கணவனோ வெளியூர் சென்றவன் சகுனத்தடை நேரிட்டு வீடு திரும்பினான். நேர் வழியில் செல்லாமல் மனைவிக்குத் தெரியாமல் பின் வாயில் வழியே வீடு திரும்பி அட்டாலி ஏறி அவ்விடம் பதுங்கிக்கொண்டு மனைவி செய்யும் செயல்களை வேவுபார்த்துக்கொண்டு இருந்தான். அன்று மனைவி தோசை சுடுவதைக்கண்டு அதனை எண்ணத் தொடங்கினான். இரண்டு சொய்யுக்கு ஒரு தோசை என்று கணக்கிட்டு 32 என்ற ஒலிகேட்டுப் பதினாறு என்று கணக்கிட்டான். மாலை அட்டாலியிலிருந்து மனைவிக்குத் தெரியாமல் வெளிவந்து வீடு தட்டினான். மனைவி அவனை வரவழைத்துச் சென்ற நோக்கம் நிறைவேறிற்றா என்று வினவினாள். ஆம், ஆருடம் கற்றுக் கொண்டேன். நீ இன்று பதினாறு தோசை சுட்டாய் என்றான். அவள் திடுக்கிட்டு இவனிடம் இனி நமது திருட்டுச் செல்லாது என்று எண்ணி அடங்கி ஒடுங்கி இருந்தாள். இது ஒரு பரம்பரைக் கதை. இதன் படி தோசை என்றால் இரண்டு ஒலிகள் என்று பொருள்படும். ஆகவே இச் சொல் வடநாட்டுச் சொல் ஆகின்றது. அது சரியா?

வடநாட்டிலிருந்தும் பல தின்பண்டங்கள் தெற்கே வந்துவிட்டன. அவைகளின் பெயர்களும் வடநாட்டுப் பெயர்களே. லட்டு, ஜிலேபி, சப்பாத்தி, குலாப்ஜான், இவை எல்லாம் வடநாட்டுப் பொருள்கள். தென்னாட்டிலிருந்து சில பண்டங்கள் வடக்கே சென்றிருக்கின்றன. அவைகளில் இட்டலி, தோசை, சாம்பார், மிளகுரசம், முதலியன. ஆகவே இவைகள் தென்னாட்டுச் சரக்காகவும் பெயராகவும் இருக்கவேண்டும்.

தோசை என்ற சொல் தமிழில் மட்டும் அன்றித் தெலுங்கு, மலையாளம், கன்னடம் இவைகளிலும் தோசை, தோசா என்றே வழங்குகிறது. ஆகவே இச் சொல் பண்டைத் தமிழ் அல்லது திராவிடச் சொல்லாக இருக்கவேண்டும். அப்படியாயின் இலக்கியங்களில் எங்கேயாவது வந்திருக்கிறதா? இதனைத் தேடிப் பார்த்து ஆராயவேண்டும். எனக்குத் தெரிந்த இரண்டு இடங்களை எழுதுகிறேன்.

(1) விறலிவிடு தூது:—

"வடை சுகியன் தோசை வகைகள்" என்று ஓர் அடியில் காண்கிறோம். ஆனால் இந்நூல் இரண்டு மூன்று நூற்றாண்டு அளவில் உண்டாக்கப்பட்டது. (2) இனிகல்வெட்டில் இச்சொல் வந்துள்ளது. காஞ்சிபுரம் தேவராச சுவாமி கோவிலில் உள்ள கல்வெட்டு 614/1919 ஒன்றின் படி அக்கோயிலுக்கு ஓர் அன்பர் தோசைக்கட்டளை ஒன்று ஏற்படுத்தியதாகக் கண்டிருக்கிறது. அது நடந்த ஆண்டு 1542 கி—பி. அந்தக் கல்வெட்டு கோயில் சாதனங்கள் புத்தகம் I ப. 326-ல் அச்சிடப்பட்டுள்ளது. அச்சுதராயர் ஆட்சிக்காலத்தில் காஞ்சிபுரம் திருவத்தியூர் அருளாளர் பெருமாள் கோயில் பண்டாரத்தார் எகாதசி தோறும் பெருமாள் கிராமப் பிரதட்சிணம் எழுந்தருளித் திரும்ப கெருட மண்டபத்தில் எழுந்தருளி அமுதுசெய்தருள தோசைப்படி கட்டளை இட்டுப் பொலியீடாகக் கொடுத்த பணம் 250. இந்தப் பொலியூட்டைக் கொண்டு 35 தோசை வீதம் 24 ஏகாதசிகளுக்குக் கொடுக்கவேண்டும். இது தவிர யாராருக்கு எத்தனை தோசை என்ற கணக்கும் அக் கல்வெட்டில் இருக்கிறது. காஞ்சிபுரத்து இட்டலி பேர் போனது. அதுபோல் தோசையும் பேர்போனது போலும்.

நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னமே காஞ்சியில் தோசை ஒரு சிறந்த தின்பண்டமாகவும் அது மூர்த்திகளுக்கு நைவேத்தியம் செய்யும் பக்குவம் பெற்றிருந்ததெனவும் இதனால் அறியலாம்.

கோயில் மூர்த்திகளுக்கு அளிப்பது என்றால் அப்பொருள் நாட்டுப் பொருளாகவும், பண்டைக்காலம் முதல் வழங்கி வந்ததாகவும், புதிதாக புகுத்தப்படாததாகவும் இருக்கவேண்டும். உதாரணமாக வெளிநாட்டுச் சரக்குகளான மிளகாய், புகையிலை, உருளைக்கிழங்கு, மலைத்தக்காளிகள் முதலியவைகளைக் கோயில்கள் ஏற்பதில்லை; வினியோகமும் செய்யக் கூடாது. ஆனால் தோசை மிகப் புனிதமானது. அருளாளர் பெருமாள் கோயிலில் வினியோகம் செய்வதினால் அது நமது நாட்டுப் பண்டைச்சரக்கே என்று அறிய வேண்டும். மற்றும் அச் சொல் தமிழ்ச்சொல்லாகவும் இருந்திருக்க வேண்டும். ஆகவே தோசை என்ற சொல்லைத் தனித் தமிழ்ச் சொல் என்று கொள்வதில் ஐயமில்லை.

இச் சொல் எவ்வாறு உண்டாயிற்று. வேறு இலக்கியங்களில் வந்ததா என்பதைப்பற்றி நண்பர்கள் தெரிவிப்பார்களாக.

—செந்தமிழ்ச் செல்வி.

கிராம ஊழியர்கள்

மலர் 15] ஆண்டு சந்தா ரூ. 8 [5—5—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 42

"ஏழை பங்காளன்" என்று ஒரு சொற்றொடர் தமிழ் மொழியில் உண்டு. தமிழ்மொழி தோன்றிய காலத்திலிருந்தே அந்தச் சொற்றொடருக்கு ஒரு தனி இடம் தரப்பட்டு, அந்தச் சொற்றொடரின் பொருளுக்கு இழுக்கு நேராவண்ணம் தமிழ்ப்பெரு மக்கள் காத்து வந்தனர்.

ஏழை என்ற உடனே எளிய மனம் படைத்து அந்த ஏழையின்பால் பங்குகொண்டு, அவன் துயர் துடைக்கும் பண்பு தமிழ்ப் பெரு மக்களின் தனிச் சிறப்புக்களில் ஒன்றாக இருந்தது. அதிலும், ஆளும் பொறுப்பிலிருந்த அன்றைய அரசர்கள், ஏழைகள் துயர் துடைப்பதையே தங்கள் கடமைகளில் முதன்மையாகக் கொண்டிருந்தனர் என்பதை நமது பழைய தமிழ் இலக்கியங்கள் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.

ஆனால், இன்று! ஆளும் பொறுப்பிலிருப்பவர்கள், ஆங்கிலேயரின் ஆட்சி முறை ஏழைகள் பங்கில் இல்லை; எனவே நாம் அவனை விரட்டிவிட்டு, ஏழைகள் பங்கில் இருக்கப்போகிறோம் என்று கூறியவர்கள்—கூறி அந்தப் பொறுப்பிலிருப்பவர்கள், நடைமுறையில் என்ன செய்துகொண்டு வருகிறார்கள் என்பது அவர்கள் ஆளும் பொறுப்பை ஏற்றதிலிருந்து இன்றுவரை நடைபெற்ற நிகழ்ச்சிகளை கவனிப்பவர்களுக்கு நன்கு தெரியவரும்.

ஆங்கிலேயன் ஆட்சியில் எந்தெந்தக் குற்றச்சாட்டுகளை இவர்கள் சுட்டிக்காட்டினார்களோ, அந்தக் குற்றச்சாட்டுகள் அவ்வளவும் இன்றும் அப்படியேதான் இருக்கின்றன.

வேண்டுமானால், அதிகமாயிற்றென்று கூறலாமே தவிர, எந்தக் குற்றச்சாட்டும் தீர்க்கப்படவில்லை. காந்தியடிகள் கூறியதுபோல், 'கிராமங்களே நாட்டின் உயிர்நாடி!' அங்கிருந்துகொண்டு நாட்டின் நலத்துக்காக பாடுபட்டு, பணந் திரட்டும் பொறுப்பிலிருக்கும் கிராம அதிகாரிகளின் சேவை, நாட்டுக்கு—அதன் வளத்துக்கு — மிகமிக இன்றியமையாததென்பதை அவர் நீண்டகாலமாகவே கூறிவந்திருக்கிறார்.

ஆனால், அவருடைய உபதேசங்களத்தனையும் அவருடைய சீடர்கள் பின்பற்றி நடப்பதில்லையென்பதை அவர்களுடைய தலைவர்களே ஒப்புக்கொண்டு மனம் நொந்து கூறுகிறார்கள்.

'கிராமங்களுக்குப் போ' என்று காந்தியார் சொல்லியிருக்கிறார். கிராமங்களுக்குப் போய்ப் பார்த்தால் அங்கேயுள்ள நிலைமை மகிழ்ச்சியளிப்பதாக இல்லை. மக்கள் வாழ்க்கைத் தரம் குலைந்து கிடக்கின்றது. அவர்களுக்குத் தேவையான வசதிகள் ஏதும் இருப்பதில்லை.

எங்கோ ஓரிடத்திலிருந்து அரசினர் பிறப்பிக்கும் ஆணைகளையும் இயற்றும் சட்டங்களையும் நடைமுறையில் அன்றாடம் செயலுக்குக் கொண்டுவரும் பணியினைச் செய்துவருகின்றவர்கள் மணியக்காரரும் கணக்கப்பிள்ளையும் அவர்கள் துணையாளர்களுமே.

இவர்கள் நிலை உண்மையிலேயே மிகப் பரிதாபமானதாகும். இவர்களுக்கு அமைந்துள்ள கடமைகள் பெரியவை; பொறுப்புக்கள் சிரமமானவை. வானம் பொழியாவிட்டாலும், மண் விளையாவிட்டாலும் வாழ்க்கைக்குப்போராடும் மக்களிடம் போராடிப் போராடி வரிகளை வசூல் செய்து, வசூல் செய்ததைப் பாதுகாத்து அரசினர்க்குச் சேர்க்கவேண்டியவர்கள் இவர்கள்.

திடீரென்று தாலுக்கா தலைநகரிலிருந்து வரும் அதிகாரிகளின் முகம் கோணாமல் நடந்துகொள்ள வேண்டும். இந்த அளவுக்குப் பணியினைச் செய்யும் இவர்களுக்குத் தரப்படும் சம்பளம் மிகமிகச் சொற்பத் தொகையாகும். எந்தத் தொழிலுக்கும் இன்று பஞ்சப்படி சேர்த்துத் தரப்படுகின்றது. ஆனால் இவர்களுக்குச் சொற்ப சம்பளம் தரப்படுவது மட்டுமல்ல, பஞ்சப்படியே தரப்படுவதில்லை.

அவர்கள் சம்பளம் கேட்கும்போது 'நீங்கள் கௌரவ உத்யோகத்தார்கள்' என்று அன்பு சொரிவதும், கணக்கு ஏடுகளைப் புரட்டிடும்போது 'ஏனய்யா இதைச் செய்யக்கூடவா முடியவில்லை—செய்யாததற்காக ரூ. 2/-' என்று காய்வதுமாக அரசாங்கம் நடந்துகொண்டு வருகின்றது.

இவர்களிடம் மட்டும் சர்க்கார் இப்படி நடந்துகொள்ளுவதில்லை. கெஜட் பதிவு இல்லாத ஊழியர்களிடையும் இதேபோல் நடந்துகொள்ளுகின்றனர். சுருங்கச் சொல்லின் ஏழையர் குறை தீர்ப்பதில் இன்றைய ஆட்சியாளரின் கவனம் எள்ளளவும் செல்லுவது இல்லை.

ஏழையின் கண்ணீரைப் பற்றிக் கவலைப்படாத இவர்கள், ஏற்றம் பெற்றோரின் எடுபிடிகளாக இருப்பது நாடு அறிந்ததே. எனவே இவர்களை ஏழை பங்காளர் என்பதைவிட ஏற்றம் பெற்றோரின் எடுபிடிகள் என்பது மிகப் பொருத்தமானதாகும்.

ஆனால் இந்த நிலை என்றும் நீடிக்கக்கூடாது. நீடிப்பது நாட்டுக்கும் ஆட்சியாளர்களுக்கும் நல்லதல்ல. இனியேனும் அவர்கள் காந்தியார் சொன்ன கருத்துரைகளை மனதில்கொண்டு ஏழை பங்காளர்கள் ஆவார்களா?

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

—பாம்புப் புற்று என்றுதானே பெயர் மாறவேண்டும்!! அவர்கள் புதிய பொருத்தமான பெயர் சூட்டிக் கொள்ளவில்லை-பழைய பெயரிட என் மனம் இடம்தரவில்லை. நான் என்ன செய்ய!

இதோ, நாகைத் தொகுதியிலிருந்து காங்கிரசால் நிறுத்திவைக்கப்பட்டு வெற்றிபெற்று என் முன் அமர்ந்திருக்கும், N. S. இராமலிங்கத்தைக் காண்கிறேன்; ஒரு பெரிய புத்தகமல்லவா, என் முன் திறந்துவைக்கப்படுகிறது!!

நெடும்பலம் சாமியப்பா பெருநிலக்கிழார்—நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவர்—மிக நல்லவர்; அவருடைய திருக்குமாரர் இராமலிங்கனார். இவர் கதரணிந்து, காமராஜரைக் கைகூப்பிக் கும்பிட்டுவிட்டு, ஆளுங்கட்சியினரின் பகுதியில் அமருகிறார் — இதோ நான், அந்த நெடும்பலத்தாருடைய அரசியல் நடவடிக்கைகளிலே நேசத்தொடர்புகொண்டு, காங்கிரசை எதிர்த்து வருபவன்.

தஞ்சை மாவட்டத்துக் காங்கிரசின் வலிவு முழுதும் திரட்டி, நெடும்பலத்தாரைத் தாக்கினர்.

தேர்தலில் தோற்றாலும் தோற்பேனேயன்றி, என் உள்ளத்துக்கு ஒத்துவராதகொள்கையை, உடன்பாடு உடையதுதான் என்று தலையாட்டி விட்டு, தப்பிப் பிழைக்க விரும்பவில்லை — என்று துணிவுடன் கூறினவர்—தொல்லை பலவற்றினுக்கு ஆளானவர்-ஆனால் தலை இறக்கம் கூடாது என்று இறுதி வரையில் வீரமாகவே இருந்தவர்.

இதோ, அவர் மகன் அமர்ந்திருக்கிறார்—ஆற்றல்மிக்க அவர் தந்தையால் சாதித்துக்கொள்ள முடியாததை, மகன் சாதித்துக்கொண்டிருக்கிறார், என்றா என்னை வாழ்த்தச் சொல்லுகிறாய்.

எதிர்ப்புக்கு அஞ்சாத அந்த அடலேறு, வீழ்ந்துபட்டதிலேயும் ஓர் வீரம் காணக்கிடந்தது! எங்ஙனம் அதனை மறந்திடச் சொல்லுகிறாய்! எக்காரணம் காட்டி, N. S. இராமலிங்கனாரைக் காங்கிரஸ்காரர் என்று கூறச்சொல்லுவாய்!

காங்கிரசால் நிறுத்திவைக்கப்பட்டவர்—அவ்வளவுதான் கூறலாம்!!

இவர் போன்றோர்தானே பெரும் பகுதி—அந்த 150ல்!!

நான் சிறுவனாக இருந்தபோது, கடைவீதியில், 'கலர்' சாப்பிடச் சென்றேன் ஒரு தடவை. அந்தக் கடையில் இரு பக்கங்களிலும், அழகழகான கலர் பாட்டில்கள் இருந்தன. அதில் ஒன்றைக் காட்டி, 'அதுகொடு' என்றேன். கடைக்காரர் சிரித்துக்கொண்டே தம்பி! அது, சும்மா அழகுக்காக கலர் தண்ணீர் ஊற்றி வைத்திருக்கிறது — சாப்பிட அல்ல— என்று கூறிவிட்டு, உள்ளே இருந்து ஒரு கலர் கொண்டுவந்து கொடுத்தார்.

காமராஜரின் முறையும் அதுவாகவே இருக்கிறது!

காங்கிரஸ்காரர் சிலர் — மிகச் சிலர்—காங்கிரசால் நிறுத்திவைக்கப்பட்டவர்கள் ஏராளம்!

பாரேன், தம்பி, வேடிக்கையை —நான் பம்பரம் ஆடும் பருவத்திலே, அங்காடியில் கண்ட முறையை, என் மகன், 'பாட்மின்டன்' ஆடும் பருவம் பெற்றிருக்கிற இன்று அரசியல் அங்காடியில் பார்க்கிறேன்! விசித்திரமான உலகம், தம்பி, இது.

"என்ன சட்டசபைக்கு சென்றிருக்கிறீர்கள், இதைக் கண்குளிர அப்பா, பார்த்திருப்பார். கொடுத்து வைக்காதவர்கள், நாம்—"

என்று, இராமலிங்கனார் இல்லத்தில், எவரேனும் அவரிடம் கூறினால், அவர், பாபம் பயந்தல்லவா போவார்!

"அப்பாவின் அஞ்சா நெஞ்சு எங்கே! இதோ நான் தஞ்சம் புகுந்து ஒரு இடம் பெற்றேனே —இதுபோலப் பணிந்திட அவர் இசைந்திருந்தால், மந்திரியேகூட அல்லவா ஆகியிருக்க முடியும். புயல் அடித்தாலும் கலத்தைச் செலுத்துவேன்—கலமே மூழ்குவதானாலும், கூடச் சேர்ந்து மூழ்குவேனே அல்லாமல் தலை தப்பினால் போதும் என்று ஓடிவிடமாட்டேன் என்று கூறிடும் வீரமாலுமிக்கு இருந்த உள்ள உரம் அவரிடம் இருந்தது. நான்...! செச்சே! அவர் இருந்து இந்தக் காட்சியைக் காணுவதா?— மகனே! மகனே! இதென்ன, எனக்குத் தெரியாத வித்தை என்று எண்ணிக்கொண்டாயோ! என் உறுதியை உனக்களிக்க முடியாது போய்விட்டதே என்றால்! என்னைக் கேலி செய்யவா இந்தப் புதியகோலம் பூண்டனை! என்றல்லவா, கேட்பார். நல்லவேளை, அவர் இல்லை—

என்றல்லவா, இராமலிங்கனார் எண்ணுவார்.

"யார் தெரிகிறதா?"

"யார்? வாலிபப் பருவமாக இருக்கிறார் வசதியானவர் போலிருக்கிறது."

"பெரிய பிரபுக் குடும்பமய்யா —பெருநிலக்கிழாராக்கும்!"

"தஞ்சை ஜில்லாவோ?"

"சாட்சாத் தஞ்சையேதான்! நெடும்பலம் சாமியப்பா என்று கேள்விதானே!"

"அடேயப்பா! அசகாயசூராச்சே!! இந்தப் பன்னீர்செல்வமும் சாமியப்பாவும் கூடிக்கொண்டு தஞ்சாவூர் ஜில்லாவில், காங்கிரசைக் கண்டதுண்டமாக்கினார்களே"

"அந்தச் சாமியப்பாவின் மகன்—நம்ம வலையில் — பார்த்தாயா, புத்தம் புதிய கதர்ச் சட்டை!"

"எமகாதகப் பேர்வழி என்றால், உமக்குத்தானய்யா தகும்! சாமியப்பா மகனையே, காங்கிரசில் இழுத்தாச்சா?"

"கெண்டையை போட்டு, வரால் இழுக்கணும்"

"ரொம்பக் காலமாக அந்தக் குடும்பம் காங்கிரசுக்கு எதிர்ப்பாயிற்றே — எப்படிக் காங்கிரசில் சேரச் சம்மதித்தார்?

"என்னய்யா, அப்படிக் கேட்கறே! ஆவடியிலே சமதர்மத் தீர்மானம் போட்டுவிட்டு இப்படிப்பட்ட ஆசாமிகளைக் காங்கிரசிலே எப்படிச் சேர்க்கலாம் என்றல்லவா கேட்க வேண்டும்?"

"இரண்டும்தான்கேட்கிறேன் என்று வைத்துக்கொள்ளுமே."

"சரி, பதில் சொல்லட்டுமா?"

"பதில் சொல்லத்தானே கேட்கிறேன்"

"நான் ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்லும்"

"இதென்ன வேடிக்கை, உம்மை நான் கேள்வி கேட்டால் ......

"நான் கேள்வி கேட்கிறேனே, பதில் கூறாமல் என்கிறீரா? என் கேள்வியிலேயே உமக்குப் பதில் இருக்கிறதய்யா, தேர்தலில் வெற்றிபெறக் கதர்சட்டை மட்டும் போதுமா?"

"போதாது"

"பணம் வேண்டுமல்லவா?"

"வேண்டும்"

"சரி! இவரிடம் பணம் இருக்கிறது—நம்மிடம் சட்டை இருக்கிறது! எப்படி!!"

"பலே! பலே! இப்படிப்பட்டவர்கள் கிடைக்கிற வரையில், உமக்கென்ன—யோகம்தான்"

இவ்விதம் ஒரு வட்டாரத்தில் உரையாடலும், மற்றோர் வட்டாரத்தில்,

"நம்ம நெடும்பலத்து இராமலிங்கமில்லாவிட்டால், நாகையில், காங்கிரஸ் என்ன ஆகியிருக்கும்?"

"மண்ணைக் கவ்வி இருக்கும்?"

"காங்கிரஸ் என்றால் கட்டோடு பிடிக்காதே அவருக்கு, எப்படி அதிலே சேர்ந்தார்?"

"அவராகவா, சேர்ந்தார்! கெஞ்சி, கூத்தாடி, கைகாலைப் பிடித்துக்கொண்டு, காங்கிரசின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும் — உங்களால்தான் அது முடியும் என்று மந்திரிகளே வந்து தூண்டினார்கள். இல்லாவிட்டால், அவராவது காங்கிரசில் சேருவதாவது..."

"காங்கிரசில் சேர்ந்தால் காசு பணம் செலவில்லாமல் ஜெயிக்கலாம் என்று எண்ணினார் போலும்"

"காசு பணமா! செச்சே! மகாத்மாவுக்கு ஜே! என்று சொன்னதால், குரல் கெட்டிருந்ததே, அவர்களுக்குக் காப்பி வாங்கிக் கொடுத்தது தவிர, வேறு செலவு ஏது?"

"என்ன, அவ்வளவு வெறுப்பாகப் பேசுகிறாய்?"

"வேறே எப்படிப் பேசுவது? பணம் கொஞ்சமாகவா கரைந்திருக்கிறது. ஆனந்தம், காங்கிரசுக்கு! அலுப்பு நம்மவருக்கு"

என்ற விதமான பேச்சும்! மற்றோர் இடத்தில்,

"அடிபட, உதைபட, சட்டம் மீற நாம்—சட்டசபை செல்ல, சீமான், பூமான்! இந்த இலட்சணத்துக்கு நமக்கு சமதர்மம் திட்டமாம்"

என்று மனம் நொந்து பேசுவதுமாக, நிலைமை இருப்பது எனக்குத் தெரிகிறதே, தம்பி, எப்படி, 150 காங்கிரஸ்காரர் என்று கூறத் துணிவு பிறந்திட முடியும்? காங்கிரசால் நிறுத்திவைக்கப்பட்டவர்களைத்தான் நான் இங்கு பெரும்பாலோராக இருக்கக் காண்கிறேன்.

பனைமரத்துண்டுக்குச் சாயமடித்து பீரங்கி போலாக்கித் தரையிலே வைத்துவிட்டு, விமானத்திலிருந்து பார்க்கிற எதிரியை ஏமாற்றுகிறார்கள் என்று முன்பு பிரிட்டிஷாரைப் பற்றிச் சொன்னார்களே, அதுபோல

செட்டிநாட்டு ராஜா
இராமநாதபுரம் ராஜா
மதுக்கூர் ஜெமீன்தார்
நெடும்பலம் மிராசுதார்
இராமசாமி படையாச்சி
எல்லைவீரர் விநாயகம்
சேனாபதிக் கவுண்டர்
பழனிச்சாமிக் கவுண்டர்

போன்றோர்களல்லவா, கதர் அணிவிக்கப்பட்டுக் காட்சி அளிக்கின்றனர். இந் நிலையில் காங்கிரஸ்காரர் 150 பேர் அங்கு அமர்ந்திருக்கக் கண்டேன் என்று எங்ஙனம் கூறமுடியும்?

எண்ணிக்கை பெருத்திருக்கிறதே தவிர, அது வலிவின் அறிகுறியுமல்ல, பொலிவுக்குகந்ததாகவுமில்லை.

எப்படியேனும் இடம் பெற வேண்டும் என்ற பேராவல் கொண்டோரும், யாரைப் பிடித்தாகிலும், கட்சிக்கு வெற்றி என்ற கணக்கைக் காட்டவேண்டும் என்ற தந்திரம் தெரிந்தோரும், ஒன்றுகூடி, நடத்திய 'பண்டமாற்று' திறம்படப் பலன் அளித்திருக்கிறது என்று வேண்டுமானால் கூறிப் பாராட்டலாம்; காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கு புதிய வலிவு கிடைத்துவிட்டிருக்கிறது, என்று எப்படிக் கூற முடியும்?

சட்ட மன்றத்தில் என் எதிர்ப்புறம் அமர்ந்திருந்தவர்களைக் கண்டதும், எனக்கு, அவர்களைக் காணுதமுன்பு, வெறும் எண்ணிக்கையை மட்டுமே எண்ணிக்கொண்டிருந்தபோது, இருந்த அச்சம் கூட நீங்கிவிட்டது.

அச்சப்படவேண்டியவர்களும், ஆயாசப்படவேண்டியவர்களும், காங்கிரஸ் கட்சியை, அது காடு சுற்றிய காலமுதற்கொண்டு நாடாளத் தொடங்கிய நாள் வரையில் கட்டிக் காப்பாற்றி, அதன் வளர்ச்சிக்காக, கண்ணீரும் செந்நீரும் கொட்டினார்களே, அவர்கள்தான். T. T. கிருஷ்ணமாச்சாரிகளல்ல!

காங்கிரஸ் கட்சிக்கு எண்ணிக்கையில் அதிகமாக வெற்றி கிடைத்தது என்றாலும், உண்மைக் காங்கிரஸ், அடையாளம் தெரியாத அளவுக்கு உருக்குலைக்கப்பட்டுவிட்டது என்பதை உணருகின்ற சிலர் அச்சப்படுகிறார்கள், ஆயாசப்படுகிறார்கள்.

இன்று காங்கிரசுக்குள் அழிவு சக்திகள் புகுந்துவிட்டன. இதனால் என்றுமில்லாத அளவுக்கு காங்கிரஸ் பலவீனம் அடைந்துள்ளது. தக்க சமயத்தில் நாம் தடுக்காவிட்டால், அழிவு நிச்சயம்.

இது, யாரோ, நிலம் கிடைக்காத 'தியாகி' — அல்லது காமராஜர் தமிழரின் பாதுகாவலர் என்ற பேருண்மையை உணர மறுக்கும் அப்பாவி, பேசியது என்று எண்ணிவிடப் போகிறார்கள். இவ்வாறு, காங்கிரஸ் அழிந்து கொண்டு வருகிறது என்று கூறுபவர், மொரார்ஜிதேசாய்.

சென்ற திங்கள் இறுதியில் ராஜ்கோட்டில், காங்கிரஸ் மாநாட்டில், பேசி இருக்கிறார்.

எனக்குத் தம்பி, வலைவீசி ஆள் பிடித்து, சிக்கினோரை ஆட்டிப் படைத்து, ஆதிக்கத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் ஒரு வல்லவரும்—இந்த இடமாவது கிடைத்ததே, இதுபோதும், இறைவா! இறைத்த பணத்துக்கு இதுவும் கிடைக்காமற் போயிருந்தால் என்ன செய்வது!!—என்று எண்ணிக்கொள்ளக் கூடிய 'நல்லவர்கள்' ஏராளமாகவும், அயன் சரக்கோ போலியோ, நமது அங்காடி நிறையச் சரக்கு நிரப்பிக் காட்ட முடிகிறது, அதுபோதும் என்று திருப்திகொள்கிற சிலரும்தான், இங்கு இருப்பது தெரிகிறது. எனவே, தியாகிகளை, வீரதீரப் போராட்டம் நடத்தியவர்களை, காங்கிரசுக்காகக் குருதி கொட்டியவர்களை, ஏராளமாகக் கொண்டதோர் வீரக் கோட்டத்துக்குள்ளே, நாம் ஒரு பதினைந்து பேர் நுழைந்துவிட்டோமே, அவர் தம் ஆற்றலுக்கு எங்ஙனம் ஈடு கொடுப்பது—அவர்கள் மத்தியில் அமர்ந்து எங்ஙனம், நமது உரிமைகளுக்காக வாதாடுவது — என்ற அச்சம் எழக் காரணம் இல்லை.

எனவே, நானும் நமது கழகத்தவரும், உள்ளேவந்து பார்த்ததில், புதிய நம்பிக்கையே கொள்கிறோம்; நமது பணியினைத் திறம்

படச் செய்ய இயலும் என்ற உற்சாகம், நிரம்ப ஏற்படுகிறது.

எதிர்ப்புறம் இருப்பவர்களிலே, மிகப் பெரும்பாலானவர்கள், அரசியலில் 'பல ஜென்மம்' எடுத்தவர்கள், சிலர், 'தத்து' எடுக்கப்பட்டவர்கள், வேறு சிலர் எந்தக் கட்சிக்கு வலிவு ஏற்படுகிறதோ, அந்தச் சமயத்தில் அதில் இருப்பவர்கள்.

விளைந்த காட்டுக் குருவிகள் ஏராளம்!

வாடி இருக்கும் கொக்குகளும் உள்ளன!

சொன்னதைச் சொகுசாகச் சொல்ல வல்ல பஞ்சவர்ணக் கிளிகள் சில உள!

மரம் பழுத்தது, பழம் நமக்குத்தான் என்றெண்ணிக்கொண்டு, வட்டமிட்டு வந்து, கிடைக்கப் பெருததால், துயரத்துடன் தொங்கிக் கிடக்கும் வௌவால்களைக் காண்கிறேன்!

"மாடப்புருவுக்குக்
கண்ணிவைத்தேன்!
மரங்கொத்தி மாட்டிகிட்டுது,
தங்கம் தில்லாலே!"

என்று பாடுவார்களே, அதுபோல் எதை எண்ணியோ எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தோரையும் காண்கிறேன்!

ஏராளமாக — மன்றத்தின் பெரும் பகுதியை நிரப்பிக் கொண்டு இருக்கிருர்கள்--ஆனல் அவர்களில், உண்மையான காங்கிரஸ்காரர்களை,

தடியடி
சிறைவாசம்
சத்யாக்கிரகம்
உப்புக் காய்ச்சுதல்
மறியல்
தண்டியாத்திரை

போன்றவைகளைக் குறித்து எண்ணும்போதே, நெஞ்சு நெக்குருக, கண்கள் நீர்துளிக்க ஆம்! ஆம்! அந்த வீரதீரப் போராட்டமெனும் தணலில் புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கக் கட்டிகள் நாங்கள்— என்று உரிமையுடன் கூறிக் கொள்ளக் கூடியவர்கள், மிகச் சிலரே, உளர்!

செஞ்சிக்கோட்டை செல்பவரை எல்லாம் தேசிங்குராஜாவென்று கூறுவது!! இங்கே, இந்தக் கோட்டையிலும், கதர் சட்டை இருக்கிறவர்களை எல்லாம், காங்கிரஸ்காரர் என்று கூறுவதற்கில்லை.

எனவே, எங்கள் எதிரில் உள்ள உண்மையான காங்கிரஸ்காரர்கள், நாங்கள் எவ்வளவோ அந்த எண்ணிக்கை அளவுதான் இருக்கும்.

நாம், 15! இத்துடன் ஒரு 'சைபர்'—சேர்க்கப்பட்டு 150 ஆகியிருக்கிறது!!—என்று நான் கூறுவதை நையாண்டி என்று கருதிவிடாதே, தம்பி, அதிலே, இன்றைய அரசியல் நிலைமை தொக்கி நிற்கிறது. சைபருக்குத் தனியாக மதிப்பு இல்லை—வேறு எண்ணுடன் சேரும்போது சைபருக்கென்று புதிய மதிப்பு பிறப்பதுமில்லை—சைபர் எந்த எண்ணுடன் சேருகிறதோ அந்த எண் மட்டும் பெருத்துவிடும்.

இதே முறையிலேதான் எண்ணிக்கை இங்குபெருத்திருக்கிறது; உண்மையில் வலிவு அல்ல இது; இரவல்!!

நான், வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டுக் காட்டுகிறேன், என்று கூறி, காங்கிரஸ் நண்பர்கள் திருப்தி தேடிக்கொள்வர்—அது அவர்கள் விருப்பம்—நான் குறுக்கிடவில்லை.

52 நிலப்பிரபுக்கள்
14 மில் முதலாளிகள்
21 பெரும்வர்த்தகர்கள்
15 பஸ் முதலாளிகள்
35 மாஜி காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள்

இப்போது சென்னை சட்டசபையில், 150 காங்கிரஸ்காரர்கள் இருப்பதாகப் பேசிப் பெருமைப்படுகிருர்களே-அவர்களை பம்பாய் ஏடு ஒன்று, 'ரகவாரியாக'ப் பிரித்துக் காட்டியிருக்கிறது!!

இதற்கு என்ன சொல்லுகிருர்கள்! நான் சொன்னல் கோபம் பொத்துக்கொண்டு வருகிறதே—பம்பாய் இதழ் பரிகாசம் செய்கிறதே!!

சட்ட மன்றத்தில அமர்ந்திருக்கும், இந்தக் 'கனவான்'களுக்கு, காங்கிரசின் எதிர்காலம் குறித்து என்ன அக்கரை ஏற்பட முடியும்? காங்கிரசின் உள்ளிருந்து கொண்டே, அதனை உருக்குலைக்க வைத்திடுவது தவிர, இவர்களால் வேறு என்ன 'தொண்டு' ஆற்ற முடியும்? கொடிய நோய்களை மூட்டிவிடுகிற **'கிருமிகளில்'** பார்க்க அழகானவைகளும் உள்ளன என்கின்றனர் மருத்துவ வல்லுநர்கள். காங்கிரசில், 'கிருமிகள்' ஏராளமாகப் புகுந்து விட்டிருப்பதுதான் எண்ணிக்கை பெருத்திருப்பதாகத் தோற்றமளிக்கிறது.

ஏற்கனவே, நான் இந்த உண்மையை ஓரளவு அறிந்தவனே என்ருலும், இங்கு உள்ளே வந்து காணும்போது, மிகத் தெளிவாகத் தெரிகிறது—காங்கிரஸ்காரர்கள் அதிகமாக இல்லை — காங்கிரசை வீழ்த்தியவர்கள் — அதிகம் உளர்.

பாரதத்திலே இருந்து ஒரு எடுத்துக்காட்டு தருவது கண்டு, ஏனண்ணு, இந்தக்குப்பை என்று சலித்துக்கொள்ளாதே தம்பி. 'அவர்களுக்காக' 'அவர்கள்' அறிந்த 'அவர்கள்' கதையிலிருந்து ஒரு எடுத்துக்காட்டு.

திருதராஷ்டிரன் — துரியனின் தந்தை — யாரையேனும் அழிக்க வேண்டுமென்ருல், வாள், வேல், கதை, சூலம் போன்ற ஆயுதங்கள் தேடுவதில்லையாம் — ஆலிங்கனம் செய்துகொள்வாளும்! அது போதுமாம் அழித்திட!

'திருதராஷ்டிர ஆலிங்கனம்' என்று புராண பாஷையில் கூறுவார்கள்!

ஒரு அணைப்பிலா, ஆளுக்கு அழிவு நேரிட்டுவிடும் என்று கேட்காதே—தம்பி!—ஆலிங்கனங்கள், ஆசாமிகளை என்ன, அரசுகளையே அழித்திருக்கிறது—ரோம நாட்டு வரலாற்றில் காணலாம் — தம்பி! **ரோமாபுரி ராணிகள்** என்ற புத்தகம் எழுதியவன்என்று நமது நிதிமந்திரி ஏற்கனவே என் மீது கோபித்துக் கொண்டிருக்கிருர் — மேலும் விளக்கம் கூறினல் இந்தக் கோடை காலத்தில் அவருக்குத் தொல்லை—கோபம் வரும் — என்பதற்காக, கோடிட்டுக் காட்டி நிறுத்திவிடுகிறேன்.

சட்டசபையில் நான் இந்தத் 'திருதராஷ்டிர ஆலிங்கனம்' காண்கிறேன்!!

அண்ணன்,



காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.